

# இளைஞர்களுக்கு



நாமக்கல் கவிஞர்

# இளைஞர்களுக்கு

நாமக்கல் கவிஞர்
வெ. ராமலிங்கம் பிள்ளை
(தமிழகத்தின் முதல்
அரசவைக் கவிஞர்)

பாரதி பதிப்பகம்
108. உஸ்மான் சாலை
தியாகராய நகர், சென்னை-17

முதற் பதிப்பு : அக்டோபர் 1987

விலை ரூ. 3-50

அச்சிட்டோர் :
விசாலம் பிரிண்டிங் ஹவுஸ்,
சென்னை - 600 024.

## பதிப்புரை

நாமக்கல் கவிஞர் உயர்திரு. இராமலிங்கம் பிள்ளை அவர்களின் அரிய நூல்களிற் சிலவற்றைத் தமிழ் மக்களுக்கு வழங்கி இன்புறும் பேறு எங்களுக்குக் கிடைத்திருக்கின்றது.

தமிழ் இனிமை மிக்கது. அவர்களின் உரை நடை அந்நயத்தோடு கருத்துக்களுஞ் செறிந்து விளங்குவது இக்கதைத் தொகுப்பு. 'இளைஞர் களுக்கு' என்ற பெயருடன் தமிழ் மக்கள் முன்னர் சமர்ப்பிக்கிறோம்.

தமிழகம் விரும்பி வரவேற்றுக் கற்றுப் பயன்பெறும் என்று நம்புகிறோம்.

பதிப்பாளர்

# இளைஞர்களுக்கு

அன்பர்களே! வருங்காலம் வாலிபர்களுடையது. எதிர்காலத்தின் இன்பம் முழுவதும் இளைஞர்கள் பொறுப்பில்தான் இருக்கின்றது. புதிதாகப் பூத்த தாமரை போன்ற உங்கள் ஒவ்வொரு முகத்தையும் பார்க்க என் மனம் பூரிக்கின்றது. நான் இப்போது உங்களைப் போன்ற ஓர் இளைஞனாக இல்லையே என்ற பொறுமைகூடப் பொங்குகின்றது. உலக வாழ்க்கையில், சூதுவாதுகளிற் சுழன்று மாசு படியாத மனமுள்ள காலம் இளமைப் பருவம். கோடி கோடியாகக் கொட்டிக் கொடுத்தாலும் வாலிபப் பருவம் நினைத்த போது வரக்கூடியதல்ல. இன்பம் நிறைந்த இளமைப் பருவத்தின் சிறப்பை என்னென்று சொல்ல முடியும்? வித்தையின் வித்துகள் வேரூன்றும் பருவம், வாழ்க்கையின் லட்சியம் வளர்கின்ற பருவம், அறிவின் மொட்டுகள் அரும்பும் காலம். மனம் என்னும் புஷ்பம் மலர்கின்ற தருணம். அன்பும் ஆர்வமும் அலைபுரளும் சமயம். புதுப்புது துடிப்புகள் போராடும் நேரம். தாராள எண்ணங்கள் தலை தூக்கும் தருணம். கஞ்சத் தனங்கள் கலக்காத காலம். ஒவ்வொரு குணமும் உருக்கொள்ளும் பருவம். கள்ளமற்ற பேச்சும் கலகலத்த சிரிப்பும் துள்ளி விளையாடும் சுறுசுறுப்பும் நிறைந்தது

இளமைப் பருவம். அப்படிப்பட்ட இளம்பிராயமுள்ள உங்களுடன் சல்லாபித்து உங்களுக்கு உதவக்கூடிய எந்தவித சேவை செய்வதும் எனக்கு மிகவும் இன்பமான காரியம். உங்களோடு உறவாடுகின்ற இந்தச் சிறிது நேரத்துக்கேனும் உங்களுடைய பார்வைகளிலிருந்து என்மீது பாய்கின்ற ஒரு சக்தியினால் நானும் ஓர் இளைஞன் போலவே இன்புறுவேன். ஆகையினால் மனிதனுடைய எல்லா நல்லெண்ணங்களும் வடிவு கொள்ளும் வசந்த காலமாகிய வாலிபப் பருவம் வாழ்க!

இளைஞர்களே! இன்று நான் உங்களுக்கு ஒரு கதை சொல்லப் போகிறேன். ஆம், ஒரு கதைதான் சொல்லப் போகிறேன். கதை கேட்பதென்றால் உங்களுக்கு வெகு தித்திப்பான விஷயமல்லவா? ஆனால் நான் சொல்லப்போகிற கதை உங்களிற் பலபேர் எதிர்பார்க்கிற மாதிரி ஒரு நவீனக் கதையல்ல. ஐரோப்பாவிலிருந்தோ அமெரிக்காவிலிருந்தோ புதுசு புதுசாய் வருகிற கதையாக, அல்லது அவற்றைத் தழுவியோ வழுவியோ எழுதப்பட்ட கதையாக இருக்காது, நான் சொல்லப்போகிற கதை. நான் சொல்லப்போகிறது ஒரு பழைய கதைதான். அந்தக் கதையை அநேகமாக நீங்கள் எல்லாருமே ஏற்கனவே கேட்டிருப்பீர்கள். உங்களிற் பலபேர் அதைப் பாடமாகவும் படித்திருப்பீர்கள். சில பேர் பரீட்சைக்காக அந்தக் கதையின் பல பாகங்களை மனப்பாடம்கூட செய்திருப்பீர்கள். ஆம், நான் சொல்லப்போகிற கதை நீங்கள் பலமுறை கேட்டுப் புளித்துப்போன கதையென்றுகூடச் சொல்லலாம். 'அட்டா! அப்படிக் கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன கதையையே



திரும்பவும் கேட்க இந்த அழகான மாலைப்பொழுதில்,—கால் பந்து, கைப் பந்து, துணிப் பந்து, தோல் பந்து, பட்டுப் பந்து, பஞ்சுப் பந்து, கட்டைப் பந்து, கம்பளப் பந்து முதலான எத்தனையோ பந்தாட்டங்களையும் இன்னும் இளைஞர்களுக்குள்ள வேடிக்கை, விநோதம், விளையாட்டுகளையெல்லாம் விட்டுவிட்டு இங்கே வந்து கூடினோம்!' —என்று உங்களுக்குக் கொஞ்சம் ஏமாற்றம்கூட ஏற்படலாம். பயப்பட வேண்டாம். அப்படி நீங்கள் ஏமாற்றம் அடையும்படி செய்யமாட்டேன். நான் சொல்லப் போவது ஒரு பழைய கதைதான். நீங்கள் பலமுறை கேட்டதுதான். பாடமாகவும் படித்ததுதான். இருந்தாலும் நான் இன்றைக்கு உங்களுக்குச் சொல்லப் போகிற ஒரு குறிப்பான விஷயத்தை— இந்தக் கதையை—உங்களுக்கு இதுவரையிலும் சொன்னவர்களும் சொல்லியிருக்க மாட்டார்கள். நீங்களாகப் படித்த போதும் அதைக் கவனித்திருக்க மாட்டீர்கள். இந்தக் கதையில் உங்களைப் போன்ற இளம் பிராயமுள்ள இரண்டு பேர்—ஒரு வாலிபனும் ஓர் இளம்பெண்ணும்—எவ்வளவு உயர்ந்த உணர்ச்சியோடு சிற்சில வார்த்தைகளைப் பேசி உருகுகின்றார்கள் என்பதை நீங்கள் பாருங்கள்.

இந்தக் கதை, நடந்த கதையா நடக்காத கதையா; வடநாட்டுக் கதையா தென்னாட்டுக் கதையா; ஆரியக் கதையா திராவிடக் கதையா என்ற ஆராய்ச்சிகளையெல்லாம் விட்டுவிட்டு, இக் கதையில் அடங்கியுள்ள உண்மைகளையும் அவற்றின் உபயோகங்களையும் மட்டும் நீங்கள் கவனிக்க

வேண்டும். நடந்த கதையோ நடக்காத கதையோ இந்தக் கதையை நம்முடைய தாய்மொழியாகிய தமிழ் மொழியில் சிறந்த புலவர்களில் ஒருவர் வெகு அழகாக பாட்டுகளாகச் செய்து வைத்துப் போயிருக்கிறார். அந்தப் பாட்டுகளில் சில பாட்டுகளை மட்டும் கதை சொல்லுவதற்காக இடையிடையே உங்களுக்குச் சொல்லப் போகிறேன். ஆனால் நான் குறிப்பாக உங்களுக்கு சொல்ல விரும்புவது ஒரே ஒரு பாட்டுதான். அந்த ஒரே ஒரு பாட்டின் ஒரே ஒரு வரியில் ஒரே ஒரு பதம்தான் வெகு முக்கியம். கதை பழைய கதைதான். பாட்டும் பழைய காலத்துப் புலவர் பாடியதுதான். இருந்தாலும் அது இந்தக் காலத்துக்கும் எவ்வளவு பொருத்தமான கருத்துக்கள் அடங்கினதென்பதைப் பாருங்கள். கதையைச் சொல்லுகிறேன், கேளுங்கள்:

நளன் என்னும் பெயருடைய ஓர் அரசன், மாவிந்தம் என்னும் நகரில் அரசு புரிந்துகொண்டிருந்தான்— 'அப்பாடா, இந்தக் கதை தானா? இதற்கா இவ்வளவு பீடிகை? நளன் சமாச்சாரம் தான் எங்களுக்கெல்லாம் நன்றாய்த் தெரியுமே!' என்று இலேசாக எண்ணிவிடாமல் நிதானமாகக் கேளுங்கள்—நளன் மிகவும் அழகான யௌவன புருஷன். அவனைப் போன்ற அழகுள்ள ஆண் பிள்ளை யாருமே இல்லை. அழகைப் போலவே, அறிவும் மற்ற அரசனுக்கு இருக்கவேண்டிய ஆற்றல்களும் உள்ளவன்.

குண்டினிபுரம் என்கின்ற இன்னொரு ஊரில் வீமராஜன் என்னும் வேறொரு அரசன் இருந்தான். இந்த வீமராஜனுக்கு தமயந்தி என்னும் பெயருடைய வெகு சௌந்தரியமுள்ள ஒரு மகள். அவளுடைய அதிசயிக்கத்தக்க அழகுக்காகப் பல ராஜகுமாரர்கள் அவளைக் கலியாணம் செய்து கொள்ள ஆசைப்பட்டார்கள். பூலோகத்தில் மட்டுமல்ல, தேவலோகத்திலும்கூட அவளைப் போன்ற அழகுடைய பெண் இல்லையென்று தேவர்களும்கூட அவளை மோகித்தார்கள். மோகித்தது மட்டுமல்லாமல் அவளுக்குத் தூதனுப்பித் தங்களை மணம் புரிய வேண்டும் என்று இந்திரன் முதலான தேவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.



அந்தக் காலத்தில் நம்முடைய நாட்டில் இருந்து வந்த கலியாண வழக்கம் எப்படியென்றால், இப்போது செய்வதுபோல ஒரு பெண்ணை அவளுக்கு இஷ்டமில்லாத மாப்பிள்ளைக்குக் கூட பெண்ணினுடைய தாய் தகப்பன்மார் பிடித்துக் கொடுத்துக் கலியாணம் முடித்துவிடுகிறார்களே அப்படியல்ல. பின் எப்படியென்றால், கலியாணம் செய்துகொள்ள விரும்பும் கன்னிகை தானாகவே தன்னை மணம்புரிய விரும்புகின்ற ஆண் பிள்ளைகளைப் பற்றித் தீர விசாரித்தறிவாள். மணவாளனாக ஆசைப்படுகிற இளைஞனுடைய அழகு, வயது, படிப்பு, பணம், குணம், திறமை முதலிய எல்லா விவரங்களையும் தூதர்கள் மூலமாகவும் தோழிகள் மூலமாகவும் உற்றார் உறவினர் மூலமாகவும் விசாரித்து அறிந்துகொண்டு தன் மனசுக்குப் பிடித்தமான மாப்பிள்ளையைத் தானாகவே தீர்மானிப்பாள். அந்தத் தீர்மானத்தைப் பெற்றோருக்குத் தெரியப்படுத்துவாள். அவர்கள் விவாகத்தை நடத்தி வைப்பார்கள். ராஜ குடும்பங்களில் இந்த விவாகம் சுயம்வரம் என்ற

பேரால் நடக்கும். சுயம்வரம் என்ருல் ஒரு பெண் சுயமாகத் தன் இச்சைப்படி கணவனை வரித்துக் கொள்வது. இங்கே ஒரு வார்த்தை. சுயம்வரம் என்கிற பதம் வடமொழிப் பதமாக இருக்கிறதால் இந்த வழக்கம் வட நாட்டாருக்குத்தான் என்று எண்ணி விட வேண்டாம். தமிழ் நாட்டிலும் பண்டைக் காலத்தில் இதே வழக்கந்தான் இருந்தது. பெண் தாஞகவே இரகசியமாக விசாரித்தோ அல்லது நேரிற் சந்தித்தோ தன் மனதிற்கிசைந்த கணவனைத் தீர்மானித்துக் கொள்வதற்குத் தமிழில் 'களவொழுக்கம்' என்று சொல்லுவார்கள். களவு என்ருல் ரகசியம் என்பது பொருள். அவ்வளவுதான், அந்தக் காலத்தில் களவு என்ற பதத்துக்கு அர்த்தம். இப்போது அந்த வார்த்தைக்கு வழங்கி வருகிற 'குற்றமான திருட்டுத்தனம்' என்ற அர்த்தம் அப்போது இல்லை. அப்படிக் களவாகத் தாஞகத் தீர்மானித்துக் கொண்ட மாப்பிள்ளையைத் தன்னுடைய பெற்ருேருடைய சம்மதத்துடன் பகிரங்கமாக மாலை சூட்டி மணந்து கொள்வதற்குத் தமிழில் 'கற்பு' என்று சொல்லப்படும். 'கற்பு' என்ருல் 'கலியாணம்' என்பது மட்டும்தான் அந்தக்காலத்தில் அர்த்தம். இந்தக் காலத்தில் 'கற்பு' என்ருல் ஒரு பெண் ஒரே நாயகனுக்கு உண்மையாக இருப்பதும் அவன் இறந்துவிட்டாலும் வேறு எவரையும் விவாகம் செய்து கொள்ள விரும்பாமல் விரதமாக வாழ்வதும் என்பது பொருள். இந்தப்பொருள் இந்தப் பதத்திற்குப் பண்டைக் காலத்தில் இருந்ததில்லை என்பதைப் பழைய இலக்கியங்களிஞல் நிச்சயமாகத் தெரிகிறது. ஆகவே 'களவு' என்ருல் ரகசியமாக



விசாரித்தறிந்து ஒருவன்மேல் விருப்பங் கொண்டு அவனையே மணந்து கொள்ள நிச்சயித்துக் கொள்வது. 'கற்பு' என்ருல் ஊரறிய அவனைக் கல்யாணம் செய்து கொள்வது. இதையேதான் 'சுயம்வரம்' என்கின்ற வடமொழிப் பதம் குறிக்கும்—கதையை விட்டுவிட்டு எதையோ சொல்லிக் கொண்டிருக்கிறேனே என்று நீங்கள் எண்ணிவிடக் கூடாது. உங்களிற் பலபேர் பெரிய வகுப்புகளில் வாசித்துக் கொண்டிருக்கும் மாணவர்கள். இந்த இலக்கிய விஷயத்தையும் நீங்கள் அறிய வேண்டியது அவசியம் என்றுதான் சொன்னேன். இதைப் பற்றிய இலக்கிய ஆதாரங்களை அறிந்துகொள்ள ஆசைப்படுகிறவர்கள் 'தொல்காப்பியம்' என்கின்ற—தமிழர் வாழ்க்கையின் இலக்கணம் சொல்லுகின்ற—பழைய நூலில் சொல்லப்படுகின்ற 'களவியல்' 'கற்பியல்' என்ற விஷயங்களைப் படித்து அறிந்து கொள்ளுங்கள்.

இனி கதையைத் தொடர்வோம்; எண்ணிறந்த இளவரசர்களும் தேவர்களும் தமயந்தியின் அழகில் மயங்கி அவரவர்கள் தங்கள் வெற்றிப் பிரதாபங்களை தூதர்கள் மூலமாகத் தமயந்திக்குச் சொல்லியனுப்பி விண்ணப்பம் செய்து காத்திருந்தார்கள். ஆடவர்களுக்குள் அழகிற் சிறந்த நள மகாராஜனுடைய உயர்ந்த குணங்களைப் பற்றியும் விசாரித்தறிந்த தமயந்தி நளனையே தன் நாயகஞக வரித்துக் கொள்ள தீர்மானித்தாள். இதையறிந்த தேவர்கள் நளனிடத்திலேயே வந்து தங்களுக்கு ஓர் உபகாரம் செய்ய வேண்டுமென்று அவனைக் கேட்டார்கள். அவர்கள் கேட்கப் போகிறது இன்னதென்று தெரி

யாமல் நளன் அவர்களுக்கு என்ன உபகாரமானாலும் செய்வதாக வாக்களித்தான். உடனே தேவர்கள் தங்களுக்கு சிபார்சாக, நளனே தமயந்தியிடத்தில் தூது போய் தங்களில் ஒருவருக்கே தமயந்தி மாலை யிட வேணுமென்று அவளைக் கேட்டுக் கொள்ளும்படி வேண்டினார்கள். எந்தவிதமான உபகாரமானாலும் செய்வதாக வாக்களித்துவிட்ட நளன் சத்தியத்தைக் காப்பாற்ற வேண்டுமென்று, தான் தமயந்திமேல் வைத்திருந்த ஆசைகளையெல்லாம் அடக்கிக் கொண்டு, தமயந்தியிடத்துக்குத் தூது சென்று, தேவர்களுக்குள் யாருக்காவது ஒருவருக்கே அவள் மாலையிடவேண்டுமென்று வஞ்சனையில்லாமல் சிபார்சு செய்தான். நளனை இன்னாரென்று அழகைக்கண்டு அநுமானத்தால் அறிந்து கொண்ட தமயந்தி, ''நீங்கள் யார்? காவலுள்ள இந்தக் கன்னி மாடத் துக்கு எப்படி வந்தீர்?'' என்று கேட்டாள். ''நான் நளன். தேவர்கள் சொல்லிக் கொடுத்த மந்திர சக்தியினால் யாரும் என்னைக் கண்டு கொள்ள முடி யாதபடி இங்கு வந்திருக்கிறேன். இவ்வளவு சக்தி களுக்கு அதிகாரிகளாக இருக்கிற தேவர்களில் ஒரு வரை நீ வரித்தால் உனக்குப் பல நன்மைகள் உண்டு'' என்று சொன்னான். ''சரி, தாங்கள் இங்கு வந்ததைப்பற்றி மிகவும் சந்தோஷப்படு கிறேன். இந்தச் சிபார்சு பேச இங்கே வந்ததற்கும் வந்தனமளிக்கிறேன். எனக்கு நீங்கள் ஓர் உப காரம் செய்ய வேணும்'' என்று தமயந்தி சொன் னாள். நளன் அப்படியே உதவி செய்வதாக வாக் களித்து ''என்ன உபகாரம்?'' என்று கேட்டான். ''நாளை சுயம்வர மண்டபத்தில் மாலையுடன் நான்



வருகின்றபோது என் மனதுக்கிசைந்த மணாளனுக்கு மாலையிட்டுக் கொள்ளுகிறேன். தாங்கள் செய்த சிபார்சுகளைப் பற்றியும் சிந்திப்பேன். ஆனால் நீங்கள் மட்டும் 'நாம்தான் தேவர்களுக்காக சிபார்சு செய்து விட்டோமே, இனிமேல் சுயம்வர மண்டபத்தில் நமக் கென்ன ஜோலி?' என்று சும்மா இருந்துவிடாமல் கட்டாயமாக நீங்களும் சுயம்வர மண்டபத்துக்கு வர வேண்டும். நீங்கள் எனக்குக் கொடுத்த வாக்குத் தவறாமல் இந்த உபகாரத்தைச் செய்யவேண்டும்'' என்று தமயந்தி நளனிடத்தில் வாக்குறுதி வாங்கிக் கொண்டாள். நளன் திரும்ப தேவர்களிடத்தில் வந்தான். உள்ளது உள்ளபடி கொஞ்சம்கூட ஒளிக்காமல் நடந்ததையெல்லாம் நளன் சொன்னான். நளன் உண்மையாக நடந்து கொண்டதற்காகத் தேவர்கள் அவனை ஆசீர்வதித்தார்கள். ஆனாலும், தமயந்தி கூறியதாக நளன் சொன்ன பேச்சிலிருந்து, தமயந்தி நளனுக்குத்தான் மாலையிடுவாள் என்று கண்டு கொண்டார்கள். தேவர்கள் மந்திர தந்திர மாயங்களில் வல்லவர்களல்லவா? மறுநாள் சுயம்வர மண்டபத்துக்கு இந்த நான்கு தேவர்களும் ஒருவருக் குத் தெரியாமல் ஒருவர் நளனைப் போலவே வேஷம் போட்டுக்கொண்டு வெவ்வேறிடத்தில் உட்கார்ந் திருந்தார்கள். மாலையுடன் தமயந்தி மண்டபத்துக் குள் வந்தாள். வழக்கப் பிரகாரம் இதற்கென்று நியமிக்கப்பட்டவர்கள் வரிசையாக எல்லா அரசர் களையும் அறியப்படுத்தினார்கள். ஒவ்வொருவராக எல்லாரையும் பார்த்து முடிந்தபின், தன்னுடைய கன்னி மாடத்துக்கு வந்து, தான் காதலித்த உருவத்தைப் போல் ஐந்துபேர் ஒரே மாதிரியாக

இருப்பதைக் கண்டு அதிசயித்து ஆலோசித்தாள். தேவர்களின் சூதுதான் என்று தெரிந்துகொண்டாள். தன்னுடைய அறிவின் சிறப்பால் தேவர்களுக்கும் மனிதருக்கும் உள்ள வித்தியாசங்களை உற்றுணர்ந்து உண்மையான நளனுக்கே மாலையிட்டாள்.

சுயம்வரம் முடிந்தது. தமயந்தியின் மணமாலை 'தனக்கு' 'தனக்கு' என்று எதிர்பார்த்து ஏமாந்து போன மற்ற அரசர்களும் இந்தத் தேவர்களும் வருத்தத்தோடு அவரவர்கள் ஊர் போகப் புறப் பட்டார்கள். மற்ற ராஜாக்களெல்லாம் சந்தடி செய்யாமற் போய் விட்டார்கள். ஆனால் தேவர்கள் அப்படிச் சும்மா போவார்களா? தேவர்கள் என்றால் எங்கேயோ ஆகாசத்திலிருக்கிற தேவலோகத்தி லிருந்து வந்தவர்கள் என்பதை நம்பாவிட்டாலும், மனிதர்களுக்குள்ளேயே தந்திர எந்திர சாமர்த்தியங் கள் அதிகமாக உள்ள ஒரு வகுப்பார் என்றுதான் வைத்துக் கொள்வோமே. அந்தத் தேவர்களில் ஒருவர், தமயந்தி தனக்கு மாலையிடவில்லை யென்ற கோபத்தால் தமயந்தியைத் தண்டிக்கப் போவதாகச் சபதம் கூறுகின்றார். அந்தச் சபதத்தையும் அந்தத் தண்டனையையும் இந்தக் கதையைத் தமிழில் வெண் பாவாகப் பாடியிருக்கிற 'புகழேந்தி' என்னும் புலவர் பெருமான் எவ்வளவு அழகாகச் சொல்லுகின்றார் பாருங்கள்:

**விண்ணரசர் நிற்க**
**வெறித்தேன் மணமாலை**
**மண்ணரசர்க் கீந்த**
**மடமாதின்—எண்ணம்**
**கெடுக்கின்றேன் மற்று அவள்தன்**
**கேள்வனுக்கும் கீழ்மை**
**கொடுக்கின்றேன் என்றான் கொதித்து.**



இதன் கருத்தைப் பாருங்கள். 'தேவர்களாகிய நாங்களெல்லாம் வெட்கப்பட்டுத் தலை குனியும்படி யாக ஒரு சாதாரணப் பூலோகத்து அரசனாகிய நளனுக்கு மாலை சூட்டிய இந்தத் தமயந்தியின் எண் ணத்தைக் கெடுத்து அவள் கொட்டத்தை அடக்கு கின்றேன்' என்கின்றார். எப்படித் தமயந்தியின் கொட்டத்தை அடக்கப் போகிறாராம் இந்தத் தேவர்? அதைப் பாருங்கள்! 'அவள் கேள்வனுக்கும் கீழ்மை கொடுக்கின்றேன்' என்றானும் அத்தேவன். 'நளனை மணந்து மிகவும் சுகப்படலாம் என்றல்லவா இவள் அவனுக்கே மாலையிட்டாள்? அந்த ஆசைகளைக் குலைத்து அவளுடைய காதலனாகிய நளனுக்கு அடிமைத்தனம் கொடுத்துக் கஷ்டப்படுத்துகிறேன் பார்' என்று கொதித்துச் சொன்னானும். அப் பப்பா! தண்டனைகளிலெல்லாம் கொடிய தண்டனை ஒருவனுக்கு அடிமைத்தனம்தான் என்று புகழேந்திப் புலவர் சொல்லுகின்றார். அப்படியா? அடிமைத் தனம் அவ்வளவு கொடுமையுள்ளதா என்பதை இன்றைய உலகத்தில் நடக்கும் அட்டூழியங்களைச் சிறிது சிந்தித்துப் பார்த்தால் தெரியும். சுதந்தி ரத்தை இழந்து அன்னியர்களுக்கு அடிமைப்பட்டு அவதிப்படுகின்ற நாடுகளையும், அவற்றிலுள்ள சுதேச மக்கள் தவிக்கின்ற தவிப்புகளையும் பாருங்கள். வெறும் ராணுவ பலத்தால் தங்களை அமுக்கிக் கொண்டிருக்கிற அன்னியனுடைய ஏவலில் கட்டாய வேலை செய்துகொண்டு சொந்த நாட்டில் பிறருக்கு அடிமை செய்து புழுங்குவதைக் காட்டிலும் வேதனை யான விஷயம் வேறொன்று உண்டா? ஏதோ அரசி யல் பிரசாரத்துக்காக, நம்முடைய நாடு சுதந்திர

மில்லாமல் இருப்பதை மட்டும் எண்ணிக்கொண்டு நான் பேசுவதாக நினைத்து விட வேண்டாம். ஐரோப்பாவை மட்டுமாவது பாருங்கள். சுதந்திரத்தோடு சுகமாக வாழ்ந்த பல சிறு சிறு ஐரோப்பிய நாடுகள் இன்று ராணுவத் திமிர்படைத்த அன்னியருடைய கொடுமைகளுக்கு ஆளாகி அல்லற்படுவதைப் பாருங்கள். ஆகையினால் கொடுமையிற் கொடுமை அடிமை வாழ்க்கை. அப்படிப்பட்ட அடிமைத்தனத்தை நளனுக்குக் கொடுத்து தமயந்தியின் கொட்டத்தை அடக்கப்போவதாகத் தேவர்கள் கொதித்தார்கள். (கீழ்மை=அடிமைத் தனம்.)

நளனும் தமயந்தியும் சிறிது காலம் வெகு சுகமாக வாழ்ந்தார்கள். ஓர் ஆண் குழந்தையையும், ஒரு பெண் குழந்தையையும் பெற்றார்கள். அழகான மக்களைப் பெற்ற ஆனந்தத்தோடு பலவிதமான தான தருமங்களைச் செய்து, வெகு நீதியாக அரசுபுரிந்து குடிஜனங்களுக்கு எந்தவிதமான குறைச்சலுமில்லாமல், எல்லாரும் புகழ்ந்து கொண்டாடும்படியாக இருந்து வருகிற சமயத்தில் நள மகாராஜனைச் சனியன் பிடித்தது.—'சனியனா? அட சனியனே!... சனியனாவது, மனிதரைப் பிடிக்கிறதாவது! இதெல்லாம் என்ன புரளிப் புளுகுகள்' என்று நம்மிற் சிலருக்குத் தோன்றலாம். 'சனியன் பிடித்தான்' என்றால் கெட்ட காலம் வந்தது என்றுதான் அர்த்தம். சனியன் என்கிற ஒரு தெய்வம் இருக்கிறதோ இல்லையோ, நம்மை அறியாமல் நாம் விலக்கவும் முடியாமல் நமக்குக் கஷ்டங்கள் வந்து விடுகிறபோது நாம் என்ன எண்ணுகிறோம்? நம்முடைய கண்ணுக்குத் தெரியாத ஏதோ ஒரு சக்தியினால்



அப்படி நேர்ந்து விட்டதாகத்தான் நினைக்க வேண்டியிருக்கிறது. அப்படிக் கெடுதல் செய்கிற சக்திக்கு நம் முன்னோர்கள் 'சனீசுரன்' என்று பெயர் கொடுத்தார்கள். அவ்வளவுதான். அந்தச் 'சனியனைப்' பற்றி இப்போது நாம் பேசினால் நம்முடைய நவீன மனசுக்கு நாகரிகமாக இருப்பதில்லை. 'சைத்தான் பிடித்துக் கொண்டான்' என்று சொன்னாலும் சம்மதிப்போம். ஆனால் 'சனியன்' என்று சொன்னால் அது சரியல்ல போலத் தோன்றுகிறது.

சரி, இந்தச் சனியன் கிடக்கட்டும்; கதைக்குப் போவோம். நள மகாராஜனுக்குக் கெட்ட காலம் வந்தது. நளனுக்கு தாயாதிக்காரனான புஷ்கரன் என்ற ஒருவன், நளனைச் சூதாடக் கூப்பிட்டான்; சூதாட்டமே கூடாது என்று சொல்லக்கூடிய நளன் தன்னுடைய கெட்ட காலப் புத்தியினால் சூதாடச் சம்மதித்தான். ஆடினான். கெட்ட காலத்தில் கெலிப்பதுண்டா? ஒவ்வொன்றாகத் தன்னுடைய செல்வங்களையெல்லாம் இழந்துவிட்டுக் கடைசியாகத்தன்னுடைய ராஜ்யத்தையும் பணயமாக வைத்து அதையும் இழந்து விட்டான். இனிமேல் வைப்பதற்கு ஒரு உடைமையும் இல்லை. தன் மனைவி தமயந்தியும் குழந்தைகளுந்தான் மிச்சம். சூதாட்டத்தின் சுபாவத்தைப் பாருங்கள். தோற்கத் தோற்க மேலும் மேலும் வெறி வந்து 'அடுத்த ஆட்டத்தில் ஜெயித்துவிடலாம்' என்று பின்னும் பின்னும் ஆடச் செய்யும். தோற்று விட்ட பொருள்களை எப்படியாவது ஜெயித்துவிட வேண்டுமென்று எதையும் பணயமாக வைக்கச் செய்யும், சூதாட்டம். எல்லா உடைமைகளையும் இழந்துவிட்டு, நாட்டையும் தோற்றுவிட்டு

வேறு எதுவும் மிச்சமில்லாமல் மனைவியான தமயந்தி யைக்கூட வைத்து ஆடிவிட நளன் எண்ணினும். அந்தச் சமயத்தில் அருகிலிருந்தவர்கள் கட்டாயப் படுத்தி அக்காரியத்தைத் தடுத்து விட்டார்கள்.

நளன் தன் நாட்டை சூதாடித் தோற்று விட்டான். —'ஐயையோ! இது என்ன அநியாயம்! ஜனங்களுக்குப் பொது உடைமையான நாட்டை, ஜனநாயகத்தைச் சிறிதும் மதிக்காமல், தன்னுடைய சொந்தப் பொருளைப் போல் ஓர் அரசன் பணயமாகவைத்துச் சூதாடுவதா? இவன் என்ன அரசன்? இது என்ன நீதி? எவ்வளவு அநாகரிகம்! இந்த நாட்டுக் கதைகளே இப்படித்தான். பொய்யும் புளுகுமான இப்படிப்பட்ட கதைகளையெல்லாம் நம்முடைய இலக்கியங்களிற் புகுத்திக் குட்டிச் சுவராக்கி விட்டார்கள்' என்று நமக்கெல்லாம் கோபம் உண்டாகலாம். சில பேருக்கு 'இந்தக் கதைகளையெல்லாம்—அவை அச்சடித்திருக்கிற புத்தகத்தை—நெருப்பிற் போட்டுக் கொளுத்திவிட வேண்டும்' என்றுகூட எண்ணம் தோன்றலாம். இருந்தாலும் இந்த இடத்தில் கொஞ்சம் பொறுமையுடன் கேட்க வேண்டும். ஓர் அரசன் தன்னுடைய நாட்டை ஒரு சொந்த வஸ்துவாகக் கருதிச் சூதாட்டத்தில் தோற்று விட்டான் என்பது இந்தக் காலத்துக்கு வெகு அநாகரிகம் போலத்தான் தோன்றும். ஏனென்றால் 'பொது உடைமை' 'குடியரசு' 'ஜனநாயகம்' என்று நாம் இப்போது பேசுகின்ற பேச்சுகளுக்கும் எண்ணுகின்ற எண்ணங்களுக்கும் அது மிகவும் முரண்பட்டது போல இருக்கிறது. ஆனல் இந்தக் காலத்து எண்ணங்களைக்



கொண்டே நம்முடைய முன்னோர்களின் செயல்களை அளந்து நாம் அவர்களுக்கு முட்டாள் பட்டம் கட்டிவிடக் கூடாது. இந்தக் காலத்துக்குச் சரியில்லாவிட்டாலும் அந்தக் காலத்துக்கு அதுசரி. ஜனநாயக முறையில் எண்ணிப் பார்த்தாலும் அந்தக் காலத்துக்கு அது ஜனநாயகம்தான். 'ஜனநாயகம்' 'குடியரசு' என்பதெல்லாம் என்னவென்றல் பெரும்பாலும் ஜனங்கள் (குடிமக்கள்) ஒத்துக் கொள்ளுகிறபடி ஒரு நாட்டில் அரசு நடப்பதுதான். அப்படியானல் அந்தக் காலத்திலிருந்த குடி ஜனங்களிற் பெரும்பாலாரும் அதற்குச் சம்மதித்துத்தான் இருந்தார்கள். ஆகையினல் அது அவர்களுக்குக் குடியரசுதான், ஜனநாயகம்தான் அல்லவா?

மேலும், இப்படிப் பொதுவான உடைமையான ஒரு சாம்ராஜ்யத்தை ஒரு தனி மனிதன் தன்னுடைய இஷ்டப்படி சூதாடித் தோற்றுவிட்டதைப் போன்ற காரியங்கள், நாகரிகம் அறியாதவர்களாக நாம் நினைக்கின்ற நம் முன்னோர்கள் காலத்தில்தான் நடந்து விட்டது என்று நினைத்துவிடக் கூடாது. அதைவிட மோசமான சூதாட்டங்கள், வெகுநாகரிகம் அடைந்துவிட்டதாக அகம்பவிக்கின்ற இந்தக் காலத்தில், நம்முடைய முன்னோர்களை முட்டாள்கள் என்று நினைக்கிற நம் கண்ணுக்கு முன்னலேயே நடக்கின்றன. இப்போது நடந்து வரும் யுத்தத்தைப் பாருங்கள். கிட்டதட்ட உலகத்திலுள்ள எல்லா நாடுகளையும் யுத்த களத்தில் பணயமாக வைத்து நிரபராதிகளான கோடானுகோடி மக்களைப் பலிகொடுத்து நடத்தப்படும் இந்தப் பகி

ரங்கச் சூதாட்டத்தைப் பாருங்கள். ஆயுதத் திமிர் கொண்ட சில அரசாங்கத்தார்—அந்த அரசாங்கம் ஜனநாயக அரசாங்கமானாலும் சரி, எதேச்சாதிகார அரசாங்கமானாலும் சரி—அவற்றில் அதிகாரிகளாக இருக்கிற சில தனிப்பட்ட நபர்களின் தீர்மானப்படி சும்மாயிருந்த நாடுகளையெல்லாம் சண்டைக்குள் ளாக்கி லட்சக் கணக்கான உயிர்களை மடியச் செய் கிறார்கள். நாகரிக காலம் என்று நாம் நினைக்கிற இந்த நாளில் எந்த ஜனநாயகத்தைக் கேட்டு இந்தச் சண்டை தொடுக்கப்பட்டது? தனிப்பட்ட ஒரு மனிதன் தன்னுடைய சொந்த உடைமையைப் போல ஒரு நாட்டின் செல்வத்தையும் அதன் ஜனங் களையும் தன் இஷ்டப்படி விரயம் செய்வது எந்த நாகரிகத்தைச் சேர்ந்தது? இந்த யுத்தத்தில் ஈடு பட்டிருக்கிற எல்லா நாடுகளிலும் ஒரு மனிதனின் அல்லது சில மனிதருடைய எதேச்சாதிகாரமே நடந்து வரவில்லையா? எங்கே ஜனநாயகம்? எது நாகரிகம்? கொஞ்சங் கொஞ்சமாக எல்லா உடைமைகளையும் தோற்றுவிட்டு நாட்டையும் தோற்றுவிட்ட பின்னும்கூட, 'ஜெயிப்போம் ஜெயிப் போம்' என்று எண்ணிக் கொண்டே மனைவியை யும் பந்தயமாக வைத்துச் சூதாட எண்ணி விட்ட நளனைப்போல இந்த யுத்தத்தில் கொஞ்சங் கொஞ்சமாகக் கோடிக்கணக்குக்கும் அடங்காத செல்வத்தையும் லட்சக்கணக்கான உயிர்களையும் தொலைத்துவிட்டும், இன்னும் 'ஜெயிப்போம்' 'ஜெயிப்போம்' என்று இந்த யுத்த சூதாட்டத்தை ஆடிக் கொண்டிருக்கிற எதேச்சாதிக்காரத்தைக் காட்டிலுமா நளன் ஆடிவிட்ட சூதாட்டம் அநாகரிகமாகப்போய்விட்டது? எண்ணிப் பாருங்கள்.



நளன் சூதாடினது சரியென்று நான் சொல்வதாக எண்ணிவிட வேண்டாம். நான் சொல்ல வந்த தெல்லாம் என்னவென்றால், நம்முடைய முன்னோர் கள் செய்த காரியங்களெல்லாம் மட்டும் அநாகரிகம் என்றும், அந்தக் கதைகளை நம்முடைய புலவர்கள் பாடியதெல்லாம் புளுகுகள் என்றும், இந்தக் காலத்தில் நடக்கிற விஷயங்கள் நாகரிகத்தைச் சேர்ந்தன வென்றும் நாம் எண்ணி ஏமாந்து போகக் கூடாது என்பது மட்டும்தான். நளன் ஆடிவிட்ட அநாகரிகச் சூதாட்டத்தைக் காட்டிலும் இப்போது நடந்துவரும் எதேச்சாதிகாரச் சூதாட்டங்கள் எவ்வளவு பொருட் சேதமும் உயிர்ச் சேதமும் உள்ள கொடுமைகள் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். நளன் ஆடிய சூதாட்டத்தில் அவன் பிறருக்குச் செய்த தீங்கு ஒன்றுமில்லை. தனக்குத் தான் அதிகத் தீங்கு தேடிக்கொண்டான். தன் னுடைய அரச போகங்களையும், சுக வாழ்வையும், அரசாளும் உரிமையையும்தான் அவன் இழந்தான். ஆனால் இப்போது நான் சொன்ன நாகரிக அரசாங் கத்தாரின் சூதாட்டத்தில் இந்த எதேச்சாரிகள் தங் களுடைய உயிருக்கு மட்டும் எல்லாவிதப் பந்தோபஸ் துகளையும் பார்த்துக் கொண்டு, பிற உயிர்களையும் பிற நாடுகளையும் அழிக்கிறார்கள். யுத்தகளம் இன்ன இடத்திலிருக்கிறதென்று கூடத் தெரியாத குஞ்சு குழந்தைகளையும், பெண்டு பிள்ளைகளையும் குண்டு போட்டுக் கொல்லச் செய்கிறார்கள்.

ஆகையால் இந்தக் காலத்தை நாகரிக கால மென்றோ, நம்முடைய முன்னோர்கள் காலத்தை அநாகரிக காலம் என்றோ எண்ணிவிடக் கூடாது. இந்த நாகரிகத்தைக் காட்டிலும் அந்த அநாகரிகமே

ஆயிரம் மடங்கு உயர்ந்தது. பஞ்சமும் பசியும், கொலையும் கொள்ளையும், பொருட்சேதமும் உயிர்ச் சேதமும் குறைந்த காலமே நாகரிக காலமாகும். அப்படிப்பட்ட காலத்தை உண்டாக்க உழைப்பதே நாகரிக அரசாங்கம். பொது உடைமையாகவோ, ஜனநாயகமாகவோ, குடியரசாகவோ அல்லது தனி மனிதன் எதேச்சிகாரமாகவோ எந்தப் பெயரில் அர சாங்கம் நடந்தாலும், வெறும் அந்தப் பெயரால் மட்டும் ஒரு அரசாங்கம் நல்லதாகிவிடாது. உண் மையில், சரியான 'பொது உடைமை' அரசாங் கமோ, சரியான 'குடியரசோ', சரியான 'ஜனநாய கமோ' இந்த உலகில் எந்த நாட்டிலும் இதுவரையி லும் ஏற்படவில்லை. எல்லா ஜனநாயக அரசாங் கங்களும் அநேக அம்சங்களில் எதேச்சாதிகாரமா கத்தான் இருக்கின்றன—இருக்க முடியும். அதைப் போலவே எதேச்சாதிகார நாடுகளும் பல அம்சங் களில் ஜனநாயக அரசாங்கங்களாகத்தான் இருக் கின்றன—இருக்க முடியும்.

ஆட்சி முறை எந்தப் பெயரால் நடந்தாலும் சரி, எந்த நாட்டில் ஆளுகின்றவர்களும் ஆளப்படு கின்றவர்களும் நியாய-அநியாயங்களை நினைத்து, தர்ம-அதர்மங்களைச் சரிபார்த்து பாவ-புண்ணி யங்களுக்குப் பயந்து நடக்கிறார்களோ அந்த நாட் டில்தான் நல்வாழ்வு உண்டு. அரசாங்கச் சட்ட திட்டங்களுக்கு மட்டும் பயந்து நடக்கின்ற நாட் டில் சந்தோஷம் இருக்காது. சட்ட பூர்வமான வாது வழக்குகள்தான் மலிந்திருக்கும். இப்போது நாம் எதைச் செய்தாலும் அது சட்டங்களுக்குச் சரியாக இருக்கிறதா என்றுதான் பார்க்கிறோம். ஆனால் நம்முடைய முன்னோர்கள் எதைச் செய்தா



லும் அது நியாயத்துக்குச் சரியா, தர்மத்துக்குத் தகுமா, அறங்களுக்கு அடுக்குமா, கண்ணுக்குத் தெரியாத சாட்சியாக நிற்கும் கடவுளுக்குச் சம்மத மாகுமா என்ற முறையில்தான் அதிகமாக எண்ணி னார்கள் என்பதை நம்முடைய இலக்கியங்களில் எங்கே பார்த்தாலும் எழுதப்பட்டிருப்பதைப் பார்க் கிறோம்.

இனி கதையைப் பார்ப்போம். நளன் மனைவி மக்களைத் தவிர, மற்றெல்லாம் இழந்து விட்டான். புஷ்கரன் மிகவும் பொல்லாதவன். நளனும் அவ னுடைய குடும்பமும் உடனே நாட்டைவிட்டுப் போய்விட வேண்டுமென்று புஷ்கரன் கண்டிப்பான உத்தரவிட்டான். நளனும் தமயந்தியும் தங்களு டைய இரண்டு குழந்தைகளுடன் அரண்மனையை விட்டு வெளியேறினார்கள். எங்கே போகலாம் என்று எண்ணும் பொழுது தமயந்தி நளனைப் பார்த்து, "நாதா, ஏதோ தீவினைப் பயனாக இப்படி நேர்ந்து விட்டது. அதைப்பற்றி துக்கப்பட்டுப் பயனில்லை. இனி நாம் வேறெங்கும் போக வேண் டாம். என்னுடைய தந்தை வீமராஜன் நம்மைச் சந்தோஷமாக வரவேற்பார். நம்முடைய கஷ்ட காலம் போகிறவரைக்கும் என் தாய் தந்தையரு டன் தங்கியிருக்கலாம்" என்றாள். அதைக்கேட்ட நளன் "நாயகியே! நான் இந்த நிலைமையில் மாம னார் வீட்டில் போய்த் தங்கியிருப்பது மிகவும் மானக்கேடான காரியம். மானத்தைவிட்டு சுகத் தைத் தேடுவது மதிக்கத்தக்கதல்ல. வேறு எங்கே போய் எப்படி ஜீவனம் செய்ய நேர்ந்தாலும் அங்கே மட்டும் வரமாட்டேன். ஆனால் எனக்கு அது மாமனார் வீடானாலும் உனக்குத் தாய்வீடு.

பெண்கள் தம் கஷ்டக் காலத்தில் பிறந்த வீட்டுக்குப் போவது பிழையாகாது. பொல்லாத காலம் போகிற வரைக்கும் நீயும் குழந்தைகளும் அங்கே இருப்பது நல்லது. தக்க துணையோடு உன்னை அங்கே அனுப்பி வைக்கிறேன். நீ அங்கே போய் சுகமாக இரு. நல்ல காலம் வந்தவுடன் நான் வந்து உன்னை அழைத்துக் கொள்ளுகிறேன்'' என்றான். அதற்குத் தமயந்தி, ''நாதா! நீங்கள் எங்கேயோ சென்று எப்படியோ கஷ்டப்பட நான் மட்டும் அங்கு சென்று அரண்மனைச் சுகங்களை அனுபவிப் பேனா? நீங்கள் இல்லாத இடத்தில் எனக்கு நிம்மதி இருக்குமா? தாங்கள் எங்கே போவதானாலும் சரி, நான் உங்களைப் பிரிந்து போகமாட்டேன். தயவு செய்து என்னையும் கூட்டிச் செல்லுங்கள். தாங்கள் அனுமதித்தால் நம்முடைய குழந்தைகளை மட்டுமா வது என் தாய் தந்தையரிடம் அனுப்பிவிடலாம்'' என்றாள். அப்படியே நளனும் ஒத்துக்கொண்டு குழந்தைகளைக் குண்டினிபுரத்துக்கு அனுப்பி விட்டு நளனும் தமயந்தியும் நாட்டைவிட்டு ஒரு காட்டுப் பாதையில் நிடத தேசத்தின் எல்லையை விட்டு நீங்கிவிட வேண்டுமென்ற ரோஷத்துடன் போகிறார்கள். காட்டுப் பாதையில் கல்லிலும் முள் ளிலும் நடந்து தமயந்தி மிகவும் கஷ்டப்பட்டாள். பகலெல்லாம் நடந்து சாயங்கால வேளையில் பசி யும் தாகமும் மேலிட்டுக் களைப்படைந்து விட்டார் கள். ஆனால் உணவுக்கு என்ன செய்வது? காட் டில் ஏதாவது மிருகம், பட்சி இவற்றை வேட்டை யாடிச் சாப்பிடலாமென்றால், வழக்கமாக ஒரு அரசன் வைத்திருக்க வேண்டிய வில், வாள் முதலிய ஆயுதங்களையும்கூட அந்தப் படுபாவி புஷ்



கரன் பறித்துக் கொண்டு அனுப்பி விட்டான். என்ன செய்வது? தன்னுடைய பசியைக் காட்டி லும் தன்னுடைய காதலியின் களைப்பைக் கண்டு நளன் மிகவும் கலங்கி விட்டான். எப்படியாவது அவளுக்கு ஏதேனும் ஆகாரம் தேடிக் கொடுக்க எண்ணி யெண்ணித் திகைத்துக் கொண்டிருக்கிற சமயத்தில் தனக்கு முன்னால் சற்று தூரத்தில் காட் டுப் பறவைகள் ஒரு பெருங் கூட்டமாக வந்து தரையில் உட்கார்ந்தன. அந்தப் பறவைகளில் சில வற்றைப் பிடித்தால் எங்கேயாவது காட்டுத்தீயில் வேகவைத்து நாயகிக்கு கொடுக்கலாமே என்ற ஆத்திரம் வந்து விட்டது நளனுக்கு. ஆனால் அவைகளைப் பிடிப்பது எப்படி? ஆத்திரக்கார னுக்கு ஆலோசனை மட்டல்லவா? உடனே நளன் தன் ஆடைகளைக் களைந்து, அவற்றைப் பறவை கள் பிடிக்கும் வலைகளைப் போல நினைத்துக் கொண்டு மெள்ள மெள்ள அந்தப் பறவைக் கூட் டத்துக்குச் சமீபமாகச் சென்று திடீரென்று அப் பறவைகளின்மீது ஆடைகளை வீசினான். நளன் ஆடைகளை வீசின அதே க்ஷணத்தில் அந்தப் பற வைக் கூட்டமும் குபீலென்று ஒருமிக்கக் கிளம் பிற்று. அப்படிக் கிளம்பிய வேகத்தில் பறவை கள் ஆடையோடு பறந்துபோய் கண்ணுக்கு மறைந்து விட்டன. நளன் ஆடைகளையும் இழந்து விட்டுக் கோவணத்தோடு நின்று நெடுமூச்சு விட லானான். பசியையும்கூட மறந்துவிட்டு நாயகி நகைக்கலானாள்.

சரி, அதுவும்கெட்ட காலத்தின் பலன்தான் என்று எண்ணிக்கொண்டு அங்குமிங்கும் தேடி ஒரு தடாகத்தைக் கண்டு அதில் தண்ணீர் குடித்

துச் சற்றுக் களைப்பாறி, இருட்டுகின்ற நேரம் வந்துவிட்டதால் இரவைக் கழிக்க ஓர் இடத்தைத் தேடிக்கொண்டு நடந்தார்கள். நல்ல வேளையாக ஒரு பாழடைந்த மண்டபம் கண்ணிற்பட்டது. நம்முடைய தமிழ் நாட்டில் இப்படிப்பட்ட சிறு சிறு மண்டபங்களை அங்கங்கே காணலாம். நேர்ந்த இடத்திலெல்லாம் ஒரு கோயிலோ மண்டபமோ கட்டி வைப்பது தமிழ் நாட்டில் தர்மமெனக் கூறப்பட்டது. தனி வழிகளிலும் காட்டுப் பாதைகளிலும் வழிப்போக்கர்களுடைய வசதிக்கென்று தண்ணீர்ச் சாலைகளென்றும் இளைப்பாறும் இடங்களென்றும் கட்டி வைப்பதைப் பெரிய புண்ணியமாக எண்ணினர்கள் நம் முன்னோர்கள். அப்படிக் கட்டப்பட்டுப் பாழடைந்த ஒரு மண்டபம் இது. தமயந்தியும் நளனும் இரவைக் கழிக்க அதிலே தங்கினர்கள். நளனுக்கு ஆடையில்லை. குளிருக்கு என்ன செய்வான்?

இப்படிப்பட்ட சமயங்களுக்கு உதவட்டும் என்றுதானே என்னவோ நம்முடைய நாட்டில் பெண்களுக்கு பதினெட்டு முழம் வரையிலும் புடவையின் நீளம் ஏற்பட்டது! தமயந்தி தன்னுடைய புடவையில் ஒரு பாகத்தைத் தன் கணவனுடைய உடலுக்குக் கவசமாகச் சுற்றிக் குளிருக்காகக் காவல் செய்தாள். அங்கே கிடந்த கற்களைத் தலையணைகளாக வைத்துக் கொண்டு அந்தப் பாழ் மண்டபத்தில் படுத்துக் கொண்டார்கள். நடந்துவந்த அலுப்பினால் தமயந்தி வெகு சீக்கிரம் தூங்கிவிட்டாள். நளனுக்குத் தூக்கம் வரவில்லை. தனக்கு நேர்ந்த கதியை நினைத்து நினைத்துப் புழுங்கினான். தேவர்களையெல்லாம் விலக்கி



விட்டுத் தனக்கு மாலை சூட்டிய தமயந்திக்குத் தன்னால் நேர்ந்த சீர்கேட்டைச் சிந்தித்தான். தன்னுடைய கஷ்டங்களை நினைத்துச் சகிக்க முடியாத வேதனைக்கு உள்ளானான். அவளையும் கூட்டிக் கொண்டு எங்கே போய் என்ன செய்வது என்று எண்ணியெண்ணிப் பார்த்தான். அவனுடைய புத்தி குழம்பிவிட்டது. பித்தம் பிடித்தவனைப் போல, அவளை விட்டுவிட்டு எங்கேயாவது ஓடி விடத் தீர்மானித்தான். எழுந்தான். இருவரும் சுற்றிக் கொண்டிருந்த ஒரே புடவை இழுத்தது. இருட்டில் கையை நீட்டி அங்குமிங்கும் தடவிப் பார்த்தான். கத்தியைப் போல ஒரு கல் கிடைத்தது. அதை எடுத்தான். சத்தமில்லாமல் புடவையை அறுத்தான். கிழிந்த புடவையோடு இருட்டில் எங்கேயோ போய்விட்டான்.

பொழுது விடிந்தது. தமயந்தி விழித்தாள். கணவனைக் காணவில்லை. புடவை துண்டிக்கப்பட்டிருந்தது. காலைக் கடன்களை முடித்து வரப் போயிருக்கிறாராக்கும் என்று எண்ணினாள். நாழிகை செல்லச் செல்ல நளன் அங்கில்லையெனக் கண்டாள். அங்குமிங்கும் ஓடினாள். ஆனமட்டும் தேடினாள். துணைவனைக் காணாது துடிதுடித்தாள். ஓவென்று அலறிப் பிரலாபித்து அழுதாள். அருகில் ஒரு பாதையில் போய்க் கொண்டிருந்த சில வியாபாரிகள் காதில் இந்த அழுகுரல் விழுந்தது. அவர்கள் ஓடிவந்து அந்தக் காட்டில் தன்னந்தனியே ஓர் உயர்குலப் பெண் தவித்துப் புலம்புவதைக் கண்டு விசாரித்தார்கள். அவர்கள் தமயந்தியின் தகப்பனுடைய ஊராகிய குண்டினிபுரத்துக்குப் போகிறவர்கள். அவள் வீமராஜ

னுடைய மகள் தமயந்தி என்பதை அறிந்து வெகு மரியாதையுடன் வேண்டிய ஆறுதல் சொல்லித் தமயந்தியைக் கூட்டிக் கொண்டு போய் வீமராஜனுடைய அரண்மனையிற் சேர்த்தார்கள். இப்படியாகத் தமயந்தி, தன் தாய் வீட்டில், முன்னாலேயே அங்கே அனுப்பப்பட்ட தன்னுடைய இரண்டு குழந்தைகளோடு இருந்து வருகிறாள்.

தமயந்தியை விட்டுவிட்டு ஓடின நளனைப் பார்ப்போம். அவன் வெறி பிடித்தவனைப் போலக் காட்டைப் பார்த்தும், கரட்டைப் பார்த்தும் மயிலைப் பார்த்தும், குயிலைப் பார்த்தும், வண்டைப் பார்த்தும், நண்டைப் பார்த்தும் என்னென்னவோ பேசிப் பிதற்றிக் கொண்டு ஒரு காட்டு வழியாகப் போகிறான். ஓர் இடத்தில் மரங்கள் ஒன்றோடொன்று உராய்வதனால் உண்டாகக் கூடிய காட்டுத் தீ எரிந்து கொண்டிருந்தது. அதன் பக்கமாக போனான். அந்த நெருப்பின் மத்தியில் ஒரு பாம்பு சிக்கிக் கொண்டு தவிப்பதைப் பார்த்தான். பாம்பென்றாலும், ஒரு ஜீவன் நெருப்பிற் சிக்கிக் கொண்டு துடிப்பதைக் கண்டு நளனுக்குப் பச்சாத்தாபம் வந்துவிட்டது. 'வீட்டுக்குள் வந்து விட்ட பாம்பா? காட்டில் இருக்கிற பாம்புதானே. அது ஏன் வீணாகச் சாக வேண்டும்? என்று எண்ணிக் கொண்டு ஜீவகாருண்ய உணர்ச்சியினால், அந்தப் பாம்பை நெருப்பிலிருந்து வெளியே எடுத்துவிட்டான். இப்படிப்பட்ட உபகாரத்தை நாமெல்லாம் கூட அடிக்கடி செய்வதுண்டு. நெருப்பிலிருந்து எடுத்த அந்தப் பாம்பை நளன் நெருப்பிலிருந்து தூரமாக ஒரு குளிர்ச்சியான இடத்தில் விட்டான். விட்ட உடனே



அந்தப் பாம்பு என்ன செய்தது? நளனைக் கடித்து விட்டது! ஐயோ! 'பாம்புக் குட்டிக்குப் பால் வார்த்த மாதிரி' என்பார்களே! அப்படி உபகாரத்துக்குப் பிரதி அபகாரமாக அந்தப் பாம்பு கடித்து விட்டதே என்று நளன் திகைக்கிற சமயத்தில் பாம்பு பேசத் தொடங்கிற்று. என்ன இது! பாம்பாவது, பேசவாவது! இதெல்லாம் என்ன பைத்தியக்காரத்தனம் என்று கேட்கக்கூடாது. இதெல்லாம் வெறும் கற்பனைதான். கற்பனை சேர்ந்தால்தான் கதைக்கு அழகு. சொல்வதற்கும் கேட்பதற்கும் சுகம். எல்லா பாஷைகளிலும் இப்படிப் பேசாத பிராணிகள் பேசினதாகக் கற்பனை உண்டு. ஆனால் இங்கிலீஷில் ஒரு புறா பேசிற்று. என்றாவது, அல்லது ஒரு பன்றி தன்னோடு வந்த பன்றிகளையெல்லாம் எண்ணிப் பார்த்தது என்றாவது, அல்லது ஒரு வைக்கோற் போரைக் காத்த நாய் பசுவோடு வாதாடிற்று என்றாவது, அல்லது 'ஜாக்கும் அவரைக் கொடியும்' என்ற கதையைப் படிக்கிறபோதாவது இப்படிப்பட்ட பேச்சுக்களை நாம் பைத்தியக்காரத்தனமாக நினைப்பதில்லை. நம்முடைய நாட்டுக் கதைகளில் இப்படி ஏதாவது வருகிறபோது மட்டும் நமக்கு எல்லாவித விசாரணைகளும் சந்தேகங்களும் வந்து விடுவது வழக்கம். அப்படிக் கேள்விகளில் மனதைச் செலுத்தாமல் அந்தக் கதையிலுள்ள சாரத்தை மட்டும் அனுபவிக்க வேண்டும். சரி, பாம்பு பேசத் தொடங்கிற்று. என்ன? ''நள மகாராஜனே! நீங்கள் என்னை நெருப்பிலிருந்து எடுத்துவிட்ட உபகாரத்துக்கு நன்றி செலுத்தாமல் நான் கடித்துவிட்டேன் என்று எண்ணிவிட வேண்டாம். உங்களுக்கு

உபகாரம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தினால் தான் கடித்தேன். இப்போது நான் உங்கள் தேகத்திற் செலுத்தியிருக்கிற விஷம் உங்களைக் கொன்று விடாது. அல்லது வேறு தீங்கும் செய்து விடாது. ஆனால் அது உங்கள் அடை யாளத்தை முற்றிலும் மாற்றி, அழகான உங்கள் மேனியைச் சற்றே கருகிக் குறுகச் செய்துவிடும். உங்களை 'நளன்' என்று யாரும் கண்டுகொள்ள முடியாதபடி செய்துவிடும். நீங்கள் உங்க ளுடைய பழைய வடிவத்தோடு வேறு எவரிடத் திலும் ஏவல் செய்து காலங்கழிப்பது மிகவும் சங் கடமாக இருக்கும். உங்களுடைய கஷ்ட காலம் தீரும் வரையில் நீங்கள் உருமாறியிருப்பது மிகவும் நல்லது. அதற்காகத்தான் கடித்தேன். சிறிது காலத்துக்குப் பின் உங்கள் கஷ்டங்கள் நீங்கி மனைவி மக்களையும் ராஜ்யத்தையும் அடைவீர்கள். அப்போது உங்கள் பழைய வடிவம் வந்துவிடும். உங்கள் பழைய வடிவத்தை அடைய வேண்டிய காலம் வந்த உடன் இதோ இந்த ஆடைகளை அணிந்தால் முன்னிருந்த உருவம் வந்துவிடும்'' என்று இரண்டு ஆடைகளை அந்தப் பாம்பு நளனுக் குக் கொடுத்து, அவன் காசிக்குச் சென்று ரிதுபன்ன மகாராஜனிடம் வேலைக்கமரும்யோசனை யையும் சொல்லிக் கொடுத்தது. இவற்றையெல் லாம் பாம்பு சொல்லி முடிப்பதற்குள் நளனுடைய அழகான தேகம் குறுகி உருமாறிப் போய்விட்ட தாம். அது எப்படி வெகு சீக்கிரத்தில் உருமாறிப் போய்விட்டதாம்! புகழேந்திப் புலவர் ஒரு சிறந்த புத்திமதியை நமக்குச் சொல்ல வேண்டுமென்ற ஆசையுடன் ஓர் உபமானம் சொல்லுகிறார்.



என்ன உபமானம்? பசித்துவந்த ஏழைகளுக்கு உதவி செய்யும் ஜீவகாருண்ய மில்லாதவனுடைய குடித்தனம், அது எவ்வளவு சிறப்புடையதாக இருந்தாலும் சீக்கிரத்தில் செல்வம் குறைந்து சீரழிந்து போகுமாம். அதைப்போல வெகு சீக்கிரத் தில் நளனுடைய உருவம் கருகிக் குறுகிப்போய் விட்டது என்கிறார். கற்பனை அழகாக இருக்கிறது, அதை நீங்கள் ரசிப்பீர்கள். அதற்காக அந்தப் பாட்டைச் சொல்லுகிறேன்; பாருங்கள்:

**வீமன் மடந்தை**
**விழிமுடியக் கண்டறியா**
**வாம நெடுந்தோள்**
**வறியோருக்கு—ஏமம்**
**கொடாதார் அகம்போல்**
**குறுகிற்றே மெய்ம்மை**
**விடாதான் திருமேனி வெந்து.**

இப்படி, அடையாளங் கண்டுகொள்ள முடி யாதபடி உருமாறிய வடிவத்தோடு நளன் காசி ராஜனிடம் போனான். தனக்கு ஏதாவது வேலை கொடுக்க வேண்டும் என்று கேட்டான். ''உனக்கு என்ன வேலை தெரியும்?'' என்றான் காசிராஜன். ''நான் தேரோட்டும் வேலையிலும் சமையல் வேலை யிலும் நிகரற்ற நிபுணன்'' என்றான் நளன். நல்ல சமையலை இன்றைக்கும் நாம் 'நளபாகம்' என்று சொல்லுகிறோ மல்லவா? தேர் ஓட்டும் வேலை யிலும் சமையல் வேலையிலும் கெட்டிக்காரன் என்றதைக் கேட்ட காசிமன்னன் மிகவும் களிப் படைந்து ''அப்படி அந்த இரண்டு வேலையிலும் சமர்த்தனான ஓர் ஆள் கிடைப்பது அருமைதான். நமக்கும் அப்படிப்பட்ட ஓர் ஆள் பிரயாணத்துக்கு

அவசியமாகத்தான் இருக்கிறது'' என்றான் காசி ராஜன். இப்போது பள்ளிக்கூடங்களில் ('டிரில் அண்டு டிராயிங்க்' கம்பைன்டு) டிரில்லும் டிராயிங் கும் இரண்டையும் சொல்லித் தரக்கூடிய உபாத்தி யாயர் வேண்டும் என்கிறார்கள் அல்லவா, அப்படிப் போல. —சரி. நளனுடைய தேர்த் தொழிலேயும், சமையல் வேலையையும் பரிட்சை பார்த்துக் காசி ராஜன் வாகுகன் என்று தன் பேர் சொல்லிக் கொண்ட நளனைத் தேர்ப்பாகனாக வைத்துக் கொண் டான். நளன் தேர்ப்பாகனாக அமர்ந்து பன்னி ரண்டு வருஷம் ஆய்விட்டது. 'என்ன? என்னமோ இரண்டு இளைஞர்களைப்பற்றி-ஒரு வாலிபனைப்பற்றி யும் ஓர் இளம் பெண்ணைப்பற்றியும் வெகு ரசமான விஷயங்களைச் சொல்வதாகச் சொன்னீர்கள்! அதை விட்டுவிட்டு என்னென்னமோ சொல்லிக் கொண்டி ருக்கிறீர்களே. எங்கே அந்த இளைஞர்கள்? சீக்கி ரம் அவர்களைப் பற்றிச் சொல்லுங்கள்' என்று உங்க ளுக்கு ஆத்திரம்கூட வரலாம். கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள். இதோ அந்த இளை ஞர்கள் வரப்போகிறார்கள்—பன்னிரண்டு ஆண்டுகள் ஓடிவிட்டன.

இந்தப் பன்னிரண்டு வருடங்களாக நளன் கவலையற்றிருந்தாலும் தமயந்தி சும்மா இருக்க வில்லை. தன்னுடைய நாயகனைக் கண்டுபிடிக்கத் தன்னாலான முயற்சிகளையெல்லாம் செய்து கொண்டேயிருந்தாள். தன் கணவன் எங்கே யாவது ஓர் அரசனிடத்திலேதான் ஏதாவது தொழிலில் அமர்ந்திருக்க முடியும் என்று எண் ணிய தமயந்தி, புத்திசாலியான ஒரு தூதனை அனுப்பி ஒவ்வொரு அரசாங்கத்துத் தலை நகரத்



திலும் சென்று அந்த நாட்டு அரசன் வசிக்கிற அரண்மனைக்குப் பக்கமாக உள்ள எல்லா இடங் களிலும் 'கானகத்துக் காரிருளில் காதலியைக் கைவிட்டுப் போனதுவும் வேந்தற்குப் போதுமோ?' 'காட்டிலே நடுராத்திரியில் தன் மனைவியைத் தவிக்க விட்டுப் போய்விட்டது ஓர் அரசனுக்குத் தகுமா?' என்று தண்டூரா போட்டுக் கேட்கச் சொன்னாள். 'இந்தத் தமுக்கு நளன் காதிலே விழுந்தால் அவனைச் சும்மா இருக்க விடாது. ஏதாவது பதில் கிடைக்கும்' என்பது தமயந்தி யின் கருத்து. அப்படியே எல்லா ராஜாங்கத் திலும் தண்டூரா போடப்பட்டது. காசியிலும் போடப்பட்டது. அந்தத் தமுக்குச் சத்தம் தேர்க் கூடத்தில் இருந்த நளன் காதில் விழுந்ததும், அவன் தமுக்கடித்தவனிடம் வந்தான். தமுக்கடித்தவனைக் கூப்பிட்டு அவனிடத்தில் ''ஒண்டொடி தன்னை உறக் கத்தே நீத்ததுவும் பண்டை விதியின் பயனே காண்...'' என்றான். 'அப்படி அந்த அரசன் தன் மனைவியை அவள் தூங்கும் போது விட்டுப் பிரிந்து போக நேர்ந்தது ஊழ் வினையின்—பூர்வ கர்மத்தின்—பய னாகத்தான் இருக்கும். வேண்டுமென்று கெட்ட எண்ணத்தோடு விட்டுவிட்டுப் போனான் என்று சந் தேகிக்க வேண்டாம்' என்றான். அதைக்கேட்டு அந்தத் தண்டூரா போட்ட தமயந்தியின் தூதன் வெகு ஆச்சரியமடைந்தான். 'எத்தனையோ ராஜாங்கத்தில் போய்த் தண்டூரா போட்டோம். ஏனென்று கேட் பாரே இல்லை. இவன் யாரோ ஒரு குஷ்டரோகி மாதிரியிருக்கிறான். இதற்குச் சமாதானம் சொல்ல வந்துவிட்டானே' என்று நினைத்தான். அந்த தூதன்

வயதானவன். தமயந்தியின் சுயம்வரத்தில் நளனைப் பார்த்திருந்தவன். நளனுடைய அழகுக்கும் இந்த அவலட்சணமான மனிதனுக்கும் ஒரு சம்பந்தமும் தெரியாமல் தமுக்கடித்த தூதன் திகைத்தான். அவன் திகைத்துக் கொண்டிருக்கும் போதே வெறேன்றும் பேசாமல் அந்த வாகுகன் போய் விட்டான். மறுபடியும் அவனைக் காண முடியவில்லை.

பிறகு தூதன் தமயந்தியிடம் திரும்பி வந்தான். காசியில் கண்ட அவலட்சணமான மனிதனைப் பற்றியும் அவன் சொன்னதையும் தெரிவித்தான். அந்தக் குரூபியான மனிதன் தன் நாயகனாக இருக்கக் கூடும் என்று தமயந்தி அநுமானித்தாள். ஆனால் அவனைப்பற்றி இன்னும் விவரமாக எப்படி அறிய முடியும், அவனைப் பார்ப்பதெப்படி? என்று ஆலோசித்தாள். அந்த மனிதனுடைய உருவத்தைப் பற்றிக் கேட்டதை நினைத்தால் அவன் அங்கே உயர்ந்த உத்தியோகத்தில் இருக்க முடியாது. ஏதாவது ஏவல் செய்கிற வேலையுள்ளவனாகத்தான் இருக்க வேண்டும். அப்படியானால் எத்தகைய ஏவல் தொழிலில் நள மகாராஜன் இருக்க முடியும் என்றெல்லாம் எண்ணிப் பார்த்தாள். தேர்ப்பாகனாகவோ அல்லது சமையற்காரனாகவோ இருக்க வேணும் என்று நினைத்தாள். உடனே ஒரு யுக்தி செய்தாள். அந்த மனிதர் காசிராஜனிடத்தில் தேர்ப்பாகனாக இருந்தால், காசிராஜன் ஒரே நாளில் இங்கே வந்து சேர வேண்டிய ஒரு கட்டாயத்தை உண்டாக்கினால், அந்த காசி மன்னனுடைய தேர்ப்பாகன் நளனாக இருந்தால்தான் அப்படி ஒரே நாளில் வரமுடியும்;



அவர் வர நேர்ந்தால் மற்ற விஷயங்களை நேரிற் கண்டு கொள்ளலாம் என்று தீர்மானித்தாள். அதற்குத் தமயந்தி வெகு சாமர்த்தியமாக ஒரு சூழ்ச்சி செய்தாள். அந்தச் சூழ்ச்சி இதுதான். முன் காசிக்குச் சென்று வந்த தூதனையே கூப்பிட்டாள். ''நீ மறுபடியும் காசிக்குச் சென்று, முன் அந்த விகாரமான மனிதரைச் சந்தித்த இடத்திலேயே நான் சொல்லுகிறபடி தண்டூரா போட்டு விளம்பரப்படுத்து. எப்படியென்றால், 'எங்கள் தமயந்தியின் கணவன் நள மகாராஜன், நடுராத்திரியில் நாயகியைக் காட்டில் விட்டுவிட்டுப் போய் பன்னிரண்டு வருஷம் ஆய்விட்டது. அவர் என்ன ஆனாரோ தெரியவில்லை. ஆகையினால் தமயந்தியானவள் அரசர் குலப் பெண்களுக்குள்ள உரிமைகளுக்கிணங்க (இன்ன சட்டம், இன்ன செக்ஷன், இத்தனையாவது 'பைலா' பிரகாரம்) மறுமணம் செய்து கொள்ளத் தீர்மானித்து விட்டாள். அதற்காகக் குண்டினிபுரத்தில் மறு சுயம்வரம் நடக்கிறது. அந்தச் சுயம்வரம் நாளைக்கே காலை பத்து மணிக்குள்ளாக நடக்கும். இஷ்டமான ராஜாக்கள் வரலாம்' என்று விளம்பரம் செய்'' என்றாள்.

அப்படியே காசியில் விளம்பரம் செய்யப்பட்டது. இந்த விளம்பரச் சத்தம் காசி ராஜனாகிய ரிதுபன்னன் காதில் விழுந்தது. 'அடடா, தமயந்திக்கா! மறு சுயம்வரமா! ஐயையோ அது நாளைக்கேயா!' என்று ரிதுபன்னன் வெகு ஆசையோடு ஆத்திரப்பட்டான். போன சுயம்வரத்தில் ரிதுபன்னன் நள மகாராஜனுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்தவன். அது மட்டுமல்ல, தமயந்தியின் மாலை தனக்குக் கிடைக்கவேண்டுமென்று தேவர்

களைக் காட்டிலும் துடித்தவன். சுயம்வரம் முடிந்த பிறகும் எந்நேரமும் தமயந்தியையே நினைத்துக் கொண்டு இருக்கிறவன். இன்னமும் அவளை எண்ணியெண்ணி ஏக்கம் பிடித்திருப்பவன். அவனுக்கு இந்த விளம்பரத்தைக் கேட்டவுடன் தன்னுடைய பழைய ஆசைகளெல்லாம் மறுபடியும் மனதில் பொங்கி விட்டன. தன்னுடைய கண்ணியத்தையும் ஒழுக்கத்தையும் மறந்தான். தான் மனைவி மக்களோடு இருப்பதையும் மறந்தான். வெறும் பெண்ணாசைப் பித்தத்தால் 'தமயந்தி இன்னொரு சுயம்வரம் நடத்துவாளா, நளனைப் போன்ற அற்புத அழகனை மணந்து, அவனுடன் நெடுநாள் இல்லற சுகங்களை அனுபவித்து மக்களையும் பெற்றிருக்கிற அவள் இன்னொரு மனிதனை மணந்து கொள்ளவும் இச்சைப்படுவாளா, இந்த விளம்பரம் உண்மையாக இருக்குமா அல்லது ஏதாவது சூதாக இருக்குமா' என்பதையெல்லாம் எண்ணிப் பார்க்க முடியவில்லை. உடனே அந்த சுயம்வரத்துக்குப் போய்ச் சேர்ந்துவிட வேண்டுமென்று துடித்தான். ஆனால் சுயம்வரமோ நாளைக்குப் பத்து மணிக்குள். காசிக்கும் குண்டினிபுரத்துக்கும் வெகுதூரம். வெகு வேகமாகச் செல்லும் குதிரைகள் பூட்டிய ரதத்தில் போனாலும் குறைந்தது மூன்று நாளாகும், போய்ச் சேர. அப்படியிருக்க நாளைக்கே எப்படிப் போய்ச் சேர முடியும்? உடனே தன்னுடைய வெகு சாமர்த்தியமுள்ள தேர்ப்பாகன் வாகுகனுடைய நினைவு வந்தது. 'சரி, வாகுகன் இருக்கிறான். அவன் பார்த்து ஓட்டினால் நம்முடைய ரதம் நாளைக்கே குண்டினிபுரம் போய்ச் சேரலாம்' என்று தேர்ப்பாகனை அழைத்துவரச்



சொன்னான். வாகுகன் வந்தான். ''குண்டினிபுரத்துக்கு வெகு அவசரமாகப் போகவேண்டியிருக்கிறது. நாளை காலை, பத்து மணிக்குள் அங்கே போய்ச் சேர வேண்டும். நீ மனது வைத்து ஓட்டினால் அதற்குள் போய்விடலாம் என்று எண்ணுகிறேன். செய்வாயா?'' என்றான் காசிராஜன். ''ஆகட்டும், அதற்கென்ன? தங்களுக்கு அவசரம் என்றால் இன்றைக்கு ராத்திரியேகூட அங்கே போய்ச் சேரும்படி செய்கிறேன். ஆனால் குண்டினிபுரத்துக்குப் போக அப்படியென்ன அவசரம்?'' என்று கேட்டான் வாகுகன். ''குண்டினிபுரத்தில் நாளை காலை பத்து மணிக்கு தமயந்தி இரண்டாம் சுயம்வரம் நடத்துகிறாள். அவளுடைய கணவன் அவளைப் பாதி ராத்திரியில் காட்டில் தனியே விட்டு எங்கேயோ ஓடிப் போனான். அவன் போய் பன்னிரெண்டு வருஷம் ஆய்விட்டது. அவன் என்னவானானோ தெரியவில்லை. தமயந்திக்கு மறுமணம் செய்துகொள்ள வேணுமென்ற ஆசை வந்திருக்கிறது. சுயம்வரம் நாட்டியிருக்கிறாள். நமக்கு இந்தச் சேதி முன்னாலேயே தெரியாமற் போய்விட்டது. நம்க்குத் தெரியாமற் போகக் கூடாது என்று எண்ணித்தானோ என்னவோ இன்றைக்கு இங்கே தனியாக ஒரு தூதனை அனுப்பிப் பறைசாற்றியிருக்கிறாள்'' என்றான் ரிதுபன்னன்.

அதைக் கேட்ட வாகுகன் அதிசயப்பட்டுச் சொல்லுகிறான்: பாட்டைச் சொல்லுகிறேன் : (கதையைச் சொல்லி முடிக்காமல் வளர்த்துகிறேனே என்று ஆத்திரப்படாமல்) கேளுங்கள் :

குறையாத கற்பினள்
கொண்டானுக் கல்லால்
இறவாத ஏந்திழையாள்,
இன்று—பறிபீறி
நெல்லிற் பருவரால்
ஓடும் நெடுநாடா!
சொல்லப் படுமோ இச் சொல்!

''என்ன மகாராஜா, தமயந்தி குற்றமில்லாத கற்பிற் சிறந்த உத்தமியாச்சே. அவள் இன்னொருவனைக் கல்யாணம் செய்துகொள்ள விரும்புகிறாள் என்று சொல்வது தகுமா? எனக்கு என்னவோ இது நம்பத் தகாததாகத்தான் தோன்றுகிறது'' என்று வாகுகன் சொல்லுகிறான். (இந்தப் பாட்டில் ஓர் உபமான அழகு இருக்கிறது பாருங்கள். காசிராஜனைப் பார்த்து, 'பறியைக் கிழித்துக் கொண்டு பருத்த வரால் மீன்கள் நெல் வயலிற் பாய்ந்து ஓடுகின்ற வளப்பமுள்ள நாட்டை அரசாளும் மன்னவனே!' என்று அழைக்கிறான். 'கொழுத்துப் பருத்துத் திமிர்கொண்ட வரால் மீன் பறியைக் கிழித்துக் கொண்டு நெல் வயலைக் குழப்பிக்குழப்பி விடுவதைப் போல நீங்களும் வெறும் பருத்துக் கொழுத்து ரத்தத் திமிர்கொண்டு தமயந்தியின் மேல்கொண்ட ஆசையால் நியாயங்களைக் குழப்புகிறீர்கள்' என்று சொல்வது போல இருக்கிறது.)

இதைக் கேட்ட ரிதுபன்னன் வாகுகனைப் பார்த்து, ''அட போடா பைத்தியக்காரா! உனக்கென்ன தெரியும்? போன சுயம்வரத்தில் நடந்த சமாசாரம்? தமயந்தி எனக்கே மாலையிட எண்ணித் தான் என்னையே பார்த்துக் கொண்டு சுயம்வர மண்டபத்தில் நடந்து வந்தாள். கிட்ட வந்த



வுடன் நாணத்தால் தலையைக் குனிந்துகொண்டு சரியாக ஆசாமியைப் பார்க்காமல் என் கழுத்திற் போட எண்ணிய மாலையைத் தவறிப்போய் நளன் கழுத்திற் போட்டு விட்டாள். சரி, என்னமோ அப் போது அப்படி விழுந்து விட்டது. இப்போது அவன் எங்கேயோ போய்த் தொலைந்தானும். அதைக் காரணமாக வைத்துக்கொண்டு இப்போ தாவது எனக்கே மாலையிடலாம் என்று எண்ணித் தான் அவசரமாக இங்கே தனித் தூதனை அனுப்பி விளம்பரத்தை எனக்குத் தெரியப்படுத்தியிருக்கிறாள்'' என்ற பொருள்பட,

என்மேல் எறிகின்ற
மாலை எழில்நளன் தன்
முன்னே விழுந்ததுகாண்
முன்னாளில்—அன்னதற்குக்
காரணந்தான் ஈதன்றோ
என்றான் கடாம்சொறியும்
வாரணந்தான் அன்னான் மதித்து

என்று பாடுகின்றார் புகழேந்தி. காசிராஜனை இந்தப் பாட்டில் ''கடாம் சொறியும் வாரணம் தான் அன்னான்'' என்று உவமிக்கிறார். அதாவது 'மதம் பிடித்த யானையைப் போன்றவன்' என்கிறார். அவன் பேசுகிற மாதிரியும் மதம் பிடித்தது போலத்தானே இருக்கிறது!

காசிராஜன் குண்டினிபுரத்துக்குப் பயண மானான். வாகுகன் தன்னுடைய அபூர்வ சக்தி யினால் குதிரைகளை ஓட்டுகின்றான். 'மேலாடை வீழ்ந்தது, எடு என்றான்; அவ்வளவில் நாலாறு காதம் நடந்ததே' என்று சொல்லும்படியாக வெகு வேகமாக ஓட்டி, விடிகிறதற்கு முன்னால் குண்டினி

புரத்தைச் சேர்ந்தார்கள். வீமராஜன் அரண்மனையின் ஆசார வாசலுக்கு முன்னால் ரதம் நின்றது. சுயம்வர மண்டபத்தையும், அதற்கு வரக்கூடிய ராஜாக்களின் காட்சிகளையும், வேடிக்கை பார்க்க வரும் திரள் திரளான ஜனங்களின் கூட்டத்தையும், மண்டபத்தில் தமயந்தி தனக்கு மாலையிடப் போவதையும், அதனால் தான் அடையப் போகிற ஆனந்தத்தையும் நினைத்து நினைத்து மனப்பால் குடித்துக் கொண்டே 'எப்போது போய்ச் சேருவோம்' என்று துடித்த வண்ணமாய் வந்த காசிராஜன், பார்த்தான் ஆசார வாசலையும் ராஜவீதியையும். ராஜாக்களா, கூட்டமா, வாத்திய முழக்கமா, ஜனங்களின் பரபரப்பா, சுயம்வர சின்னங்கள் ஒன்றையாவது காணோம். ஒரு மாவிலை மகரதோரணங்கூட இல்லை. திடுக்கிட்டான் காசிராஜன். மோசம் போனோம் என்பதைக் கண்டு கொண்டான். சரி வந்தாச்சு, என்ன செய்வது?

ஓர் அரசன் ரதம் வந்து ஆசார வாசலில் நின்றதைக் கண்ட காவலர்கள், வெகு அவசரமாக அந்தச் சேதியை அரண்மனைக்குள் அனுப்பினார்கள்.

நம் வீட்டுக்கும் யாராவது நம்மைப் பார்க்க வந்தால் அப்படி வருகிறவர்களுடைய அந்தஸ்துக்குத் தகுந்தபடி அவர்கள் வந்திருக்கிற சேதி நாமிருக்கிற இடத்துக்கு வந்து சேரும். யாராவது ஓர் ஏழை நம்மிடம் ஓர் உதவியை நாட நம் வாசலுக்கு வந்தால், அங்கே முன்னாலிருக்கிறவர்கள் அவன் வந்து நிற்பதைக்கூட உடனே கவனிக்கமாட்டார்கள். அப்படிக் கவனித்தாலும் அப்



படி ஒருவன் வந்து காத்திருப்பதை உடனே நமக்குச் சொல்லமாட்டார்கள். சில சமயங்களில் அவர்களே கூட அவனுக்குப் பதில் சொல்லி, 'ஐயா உள்ளே ரொம்ப வேலையாக இருக்கிறார்கள்; (அல்லது அலுத்துப் படுத்திருக்கிறார்கள்) அவர்களை இப்போது பார்க்க முடியாது' என்று அனுப்பி விட்டாலும் விடுவார்கள். அவனைக் காட்டிலும் கொஞ்சம் உயர்ந்த ஒருவன் வந்தால் சாவதானமாக வந்து 'யாரோ வந்திருக்கிறார்' என்பார்கள். யாராவது ஒரு மாட்டு வண்டியிலாவது வந்து நம் வீட்டுக்கு முன்னால் இறங்கி வந்தால் அந்தச் சமாசாரம் கொஞ்சம் வேகமாக நமக்கு அறிவிக்கப்படும். ஓர் அழகான குதிரை வண்டி வந்து வாசலுக்கு நேராக நின்றுவிட்டால், இன்னும் வேகமாக நமக்குத் தெரியப்படுத்தப்படும். தப்பித் தவறி ஒரு மோட்டார் வண்டி வீட்டுக்கு முன்னால் வந்து நின்றுவிட்டால் அதிலிருக்கிறவர்கள் நம்மைப் பார்க்க வராதவர்களாக இருந்தாலும் சரி, நம்ம வீட்டுக் குஞ்சு குழந்தைகள்கூட ஒரே கும்பலாக ஓடிவந்து 'ஐயா! அப்பா! அண்ணா! யாரோமோட்டாரில் வந்திருக்கிறார்கள். நம்ம வீட்டுக்கு—மோட்டாரில். வாங்கோ வந்து பாருங்கோ' என்று வெகு அவசரமாக வந்து நம்மை ஏவுவார்கள், அல்லவா?...

அப்படிப்போல காசிராஜன் வந்த சேதி வெகு துரிதமாக வீமராஜனுக்கு அறிவிக்கப்பட்டது. இப்படி ஒரு சம்பவம் நடக்கலாம் என்பதை வெகு ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த தமயந்தி ஒரு ராஜரதம் வந்திருப்பதை அறிந்து 'வந்து விட்டார் ஆசாமி. நம்முடைய விமோசன காலம் விடிந்துவிட்டது' என்று மகிழ்ந்தாள். ஏனென்றால்

தன்னுடைய நாயகன் அல்லாமல் வேறு யாராயிருந்தாலும் இவ்வளவு சீக்கிரம் காசியிலிருந்து குண்டினிபுரத்துக்குத் தேரோட்டிவிட முடியாதென்பது அவளுக்குத் தெரியும்.

காசிராஜன் வந்திருப்பதாகக் கேள்விப்பட்டு, வீமராஜன் வெகு விரைவாக வந்து வரவேற்றார். "வரவேணும், மன்னர் பெருமானே! தங்கள் வருகையால் நான் மிகவும் பெருமைகொள்ளத் தகுந்தவன் ஆவேன். ஏது இவ்வளவு தூரம்? அடியேனால் ஆக வேண்டிய அவசர காரியம் ஏதேனுமுண்டா?" என்று கேட்டான்.

வீமராஜன் காசிராஜனாகிய ரிதுபன்னனை வரவேற்றுக் கேட்கிறான்:

**கன்னி நறுந்தேறல்**
**மாந்திக் கமலத்தின்**
**மன்னித் துயின்ற**
**வரிவண்டு—பின்னையும்போய்**
**நெய்தற்கு அவாவும்**
**நெடுநாடா! நீ என்பால்**
**எய்தற்கு அவாவியவாறு என்?**

"புதிதாக மலர்ந்த தாமரை மலரில் அப்போது தான் ஊறிய தேனை வயிறார உண்டு பசி தீர்ந்து அந்தத் தாமரைக்குள்ளேயே சுகமாகத் தூங்கிக் கொண்டிருந்த வண்டானது பசியாறிய பின்னையும் போய் ஆம்பல் முதலான இதர மலர்களையும் மொய்க்கின்ற காட்சிகள் நிறைந்த பெரிய நாட்டை அரசாளும் மன்னவனே! நீங்கள் என்னிடத்துக்கு வந்த காரியம் என்ன?" என்றான். இந்தப் பாட்டில் உள்ள உபமானத்தினால் கவிஞர் ஓர் அழகான புத்திமதியைக் காசிராஜனுக்குச்



சொல்லுவதுபோல உலகத்துக்குச் சொல்லுகிறார். பாட்டை மேலாகப் பார்த்தால் அது தெரியாது. கவனித்துப் பார்க்க வேண்டும். பசியை ஆற்றிக் கொள்ள தேனைத் தேடிவந்த வண்டு ஒரு தாமரை மலரில் புதுத்தேனை மாந்தி (மாந்தி என்றால் வயிறார உண்டு) பசியாறி உறங்கப்போன வண்டு வெறும் சபல புத்தியினால் பின்னையும்போய் வேறு புஷ்பங்களை மொய்த்துக்கொண்டு அலைவதைப் போல, உனக்கென்று தேடி மணந்துகொண்ட கன்னியான ஒரு மனைவியுடன் இல்லற சுகங்களை அனுபவித்து வீட்டோடு இருந்துகொண்டிருக்கிற நீ, சபல புத்தியினால் பின்னையும் இன்னொருவனுடைய மனைவியான தமயந்திக்கு ஆசைப்பட்டு விட்டாயே, தகுமா? மேலும் நீ மணந்துகொண்ட உன் மனைவியோ கன்னிகையான அப்போதலர்ந்த தாமரையின் தேன். அதை அனுபவித்துத் திருப்தியடைந்து இருக்கவேண்டிய நீ, ஏற்கனவே நேற்றிரவில் அலர்ந்து இப்போது வாடிப்போனதாக இருக்கிற ஆம்பல் மலரைப்போல் கன்னிகை அல்லாத தமயந்தியின் மேல் ஆசை கொண்டது சரியா என்றும் கேட்பது போல் 'கன்னி நறுந் தேறல் மாந்திக் கமலத்தில் மன்னித்துயின்ற வரிவண்டு பின்னையும்போய் நெய்தற்கு அவாவும்' என்ற சொல்லடுக்கில் 'கன்னி' 'கமலம்' 'மாந்தி', 'துயின்ற' 'பின்னையும் போய்' 'அவாவும்' என்ற பதங்களை வேண்டுமென்றே கவிஞர் பிரயோகித்திருக்கிற அழகையும் நீங்கள் அறிந்து அனுபவிக்க வேண்டும். இந்த அர்த்தத்தைக் காசிராஜன் கண்டுகொண்டிருக்க மாட்டான் என்றாலும், கவிஞர் இதை நமக்காக

எழுதியிருக்கிறார். நாம் கண்டுகொள்ள வேண்டும். அப்படிக்கேட்ட வீமராஜனுக்கு என்ன பதில் சொல்லுவதென்று தெரியாமல் காசிராஜன் தட்டுக் கெட்டுத் தடுமாறி, கடைசியாக ''ஒன்றுமில்லை, வேறொரு காரியமாக இந்தப் பக்கத்துக்கு வந்தேன். அப்படியே உங்களையும் பார்த்துவிட்டுப் போகலாம் என்று சும்மாத்தான் வந்தேன்'' என்றான் ரிது பன்னன்.

மற்ற பேச்சுகளெல்லாம் முடிந்து, காசிராஜனை அரண்மனையின் ஒரே பாகத்தில் தங்கச் செய்து உபசரித்தான். ஆகாரத்தைப் பற்றிய பேச்சு வந்த போது காசிராஜன், ''என்னுடைய தேர்ப்பாகன் தேவாமிர்தம்போல் சமைக்கக்கூடிய சமர்த்தன். பாக சாஸ்திரத்தில் அவனுக்கு இணையானவனைப் பார்க்கமுடியாது. அவனே சமையல் செய்யட்டும்; நாமெல்லாரும் விருந்துண்போம்'' என்றான் காசி ராஜன்.

அப்படியே வாகுகன் சமைக்கத் தொடங் கினான். தமயந்தியினுடைய சூழ்ச்சியினால், அந்த வாகுகனைத் தான் பார்க்கத் தோதாக இருக்கும் படி ஓர் இடத்தில் சமைக்க இட வசதி செய்யப் பட்டது. ஒரு ஜன்னலின் வழியாகத் தான் இருப்பதைப் பிறர் அறியாதபடி தமயந்தி அந்த வாகுகனைப் பார்த்தாள். தன்னுடைய காந்தனான நளமகாராஜனுடைய லாவண்யமான ரூபத்துக்கும் இந்தக் குஷ்டரோகியைப் போன்ற மனிதனுடைய குட்டையான ரூபத்துக்கும் கொஞ்சங்கூட சம்பந்தமில்லாமல் இருந்தது. தன் நாயகன்தான் அந்த மாறுவேடத்தில் இருக்கிறார் என்பதை எப்படி அறிவது? அதற்கு ஒரு தந்திரம் செய்



தாள் தமயந்தி. தன்னுடைய குழந்தைகள் இரு வரையும் அந்த வாகுகன் சமைக்கிற இடத்துக்கு அனுப்பினால், அந்தக் குழந்தைகளைப் பார்த்த வுடன், அந்தச் சமையற்காரன் நளனாக இருந்தால், பன்னிரண்டு வருடங்களாகப் பிரிந்து போயிருந்த தன் மகனையும் மகளையும் கண்டு சும்மா இருந்து விடமுடியாது. புத்திர வாஞ்சை அவன் மாறு வேஷத்தையும் மறக்கச் செய்துவிடும்; அப்போது கண்டு கொள்ளலாம் என்று தீர்மானித்துத் தன் தோழி பெண் ஒருத்திக்கு இதைச் சொல்லி தன் மக்களை அந்தச் சமையற்காரனுக்கு முன்னால் அனுப்பினாள். கண்டான் குழந்தைகளை வாகுகன்.

மக்களைமுன் காணா
மனம்நடுங்கா வெய்துயிராப்
புக்கெடுத்து வீரப்
புயத்தணையா—'மக்காள்நீர்
என்மக்கள் போல்கின்றீர்
யார்மக்கள்?' என்றுரைத்தான்
வன்மக் களியானை மன்.

மக்களைக் கண்டானோ இல்லையோ, மனம் பட படத்து மூச்சு வேகப்பட்டு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து, இரண்டு குழந்தைகளையும் சேர்த்து வாரியெடுத்துத் தன் மார்போடு அணைத்துக் கொண்டு, ''குழந்தைகளே! வெகு அவலட்சண மான ஒரு மனிதன், சமைக்கிற வேலை செய்கிற ஒருவன், அழுக்கான கைகளால் தொட்டு அணைத் துக்கொண்டு விட்டானே என்று கோபித்துக் கொள்ள வேண்டாம்—உங்களைப் பார்த்தால் நீங் கள் என்னுடைய குழந்தைகளைப் போல் இருக் கிறீர்கள். அந்த நினைப்பினால் வாரியணைத்துக்

கொண்டேன். நீங்கள் யாருடைய குழந்தைகள்?'' என்றான்.

அன்பர்களே, நீங்கள் வெகு நேரமாக ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற இளைஞர்கள் இவர்கள்தான். இந்த இரண்டு குழந்தைகளும் -இந்த இரண்டு வாலிபர்களும் அந்த வாகுகனுக்குச் சொல்லுகின்ற பதில் மொழியைப் பாருங்கள். அதைச் சொல்லத்தான் இவ்வளவு நேரமாக நான் சொல்லி வந்த இத்தனை பீடிகையும். தேசாபிமானம் என்றும், சுதந்திரம் என்றும், சுயராஜ்யம் என்றும், விடுதலை வேண்டும் என்றும், அடிமைத்தனம் ஒழிய வேண்டுமென்றும் இப்போது நாம் என்னென்னவோ சொல்லுகின்றோமே, அந்தப் பேச்சுகளின் சாரத்தையெல்லாம் ஒரே ஒரு வாக்கியத்தில் உள்ளடக்கி இந்த இளைஞர்கள் சொல்லுகின்றார்கள். 'நீங்கள் யாருடைய மக்கள்' என்று கேட்ட அந்தச் சமையற்காரனுக்கு:

'மன்னன் நிடதத்தார்
வாழ்வேந்தன் மக்கள்யாம்
அன்னை தனைக் கான்விட்டு
அவனேக—இந்நகர்க்கே
வாழ்கின்றோம் எங்கள்
வளநாடு மற்றொருவன்
ஆள்கின்றான்' என்றார் அழுது.

''நிடத தேசத்தை வெற்றிப் பிரதாபத்துடன் பகைவர்கள் பயப்படும் ஆயுத பலத்துடன் பரிபாலித்து சுகமாக வாழ்ந்து கொண்டிருந்த நளமகாராஜனுடைய மக்கள் நாங்கள். எங்கள் தந்தை, எங்கள் தாயாரைக் காட்டிலே விட்டுவிட்டு எங்கேயோ போய்விட்டார். நாங்கள் பாட்டன் வீடாகிய இந்த நகரத்தில் வாழ்ந்து வருகிறோம். எங்கள்...... எங்களுடைய...... வளம் பொருந்திய நாட்டை......அந்த நாட்டுக்கு உரிமையில்லாத வேறொருவன் ஆள்கின்றான்'' என்று அழுதார்கள். இந்தப்பாட்டில் பதங்கள் அமைந்திருக்கிற அழகைப் பாருங்கள். முதலடியில் 'மன்னன் நிடதத்தார் வாழ் வேந்தன் மக்கள் யாம்' என்று வெகு பெருமையுடன் ஆரம்பிக்கிறார்கள். தங்கள் தகப்பன் தாயாரைக் காட்டில் விட்டுவிட்டு ஓடிப் போனதை விரித்துச் சொல்ல வெட்கப்படுகிறவர்கள் போல இலேசாக அதை 'அன்னைதனைக் கான் விட்டு அவனேக' என்று மட்டும் சொல்லிவிட்டு, 'இன்னகர்க்கே வாழ்கின்றோம்' என்பதையும் அனாயாசமாகச் சொல்லிவிட்டு, 'எங்கள் வளநாடு மற்றொருவன் ஆள்கின்றான் என்றார் அழுது' என்பதை மட்டும் எவ்வளவு துக்கத்தோடு சொல்லுகிறார்கள் பாருங்கள். 'என்றார் அழுது' இந்த 'அழுது' என்ற பதத்தைப் புலவர் எவ்வளவு அர்த்த புஷ்டியோடு அங்கே அமைத்திருக்கிறார் என்பதை நீங்கள் அனுபவிக்கவேண்டும். தங்கள் தந்தை ஆண்ட நாட்டை, தங்களுக்கு உரிமையான (எங்கள் வளநாடு) அரசை, அந்த நாட்டை ஆள்வதற்கு எவ்விதமான உரிமையும் இல்லாத அன்னியன் ஒருவன் ஆளுவதை எவ்வளவு அருவருத்து இந்த இளைஞர்கள் அழுகின்றார்கள் பாருங்கள். இந்த அழுகையும் அருவருப்பும் நமக்கெல்லாம் இருக்க வேண்டாமா?

இப்படிச் சொல்லி அந்த இளைஞர்கள் அழுவதைக் கண்ட வாகுகன் அந்தச் சிறுவர்களைப் பரிசோதிக்க எண்ணி,

'உங்கள் அரசு ஒருவன்
ஆளநீர் ஓடிப்போந்து
இங்கண் உறைதல்
இழுக்கன்றோ?—செங்கை
வளவரசே' என்றுரைத்தான்
மாதவத்தாற் பெற்ற
இளவரசை நோக்கி எடுத்து.

"உங்கள் ராஜ்யத்தை வேறொருவன் ஆள விட்டு விட்டு உங்கள் தந்தை ஓடிப்போக இங்கே நீங்கள் இப்படி இருந்து கொண்டிருப்பது இழிவான—மான மற்ற—காரியமல்லவா? ஏ, இளவரசனே!" என்றான் வாகுகன். உடனே பையனுக்கு ரோஸம் வந்து விட்டது. ராஜ்யத்தை வேறொருவனுக்கு விட்டு விட்டு இன்னொருவர் வீட்டில் சாப்பிட்டுக் கொண் டிருப்பது கேவலமான காரியமல்லவா என்று கேட்டு விட்டானே இந்தச் சமையற்காரன்! அதைப் பொறுப்பானா வீரவம்சத்தில் பிறந்த அந்த இளை ஞன்? கோபம் வந்து விட்டது. தன்னைக் குறித்துச் சொன்னதைக் காட்டிலும் தன்னுடைய தந்தை, வேறொருவனுக்கு நாட்டை விட்டுவிட்டு ஓடிவிட்ட தாக அந்தச் சமையற்காரன் எண்ணி விட்டதாக நினைத்துப் பையன் சீறி விழுகிறான். "அடே சமையற்காரப் பயலே! என் தந்தை நாட்டை விட்டுவிட்டு ஓடிவிட்டவனென்றும், நாங்கள் இங்கே மானமற்று வாழ்ந்து வருகிறோம் என்றும் சொல்லி விட்டாயே. சமையற்காரனுக்குள்ள உன் அற்பப் புத்தியைக் காட்டிவிட்டாயே. இந்த வார்த்தையை நினைக்கவும் சொல்லவும் அரசர்கள் கூட அஞ்சுவார் கள். நீ கூசாமல் சொல்லிவிட்டாய். உன்னைச்



சொல்வதிற் பயனில்லை. அற்பத் தொழில் செய்கிற உனக்கு அற்ப புத்திதான் இருக்கும். பெரிய புத்தி எப்படி வரும்? என்னுடைய தந்தை பகைவர்களுக்குப் பயந்து ஓடிப்போய் விட்டவர் அல்ல. சத்தியத்துக்குக் கட்டுப்பட்டு ராஜ்யத்தை விட்டுத் தாமாக வெளியேறி னரேயல்லாமல் பயந்து ஓடிப்போனவர் அல்ல."

நெஞ்சால் இம்மாற்றம்
நினைந்து உரைக்க நீயல்லாது
அஞ்சாரோ மன்னர்?
அடும்மடையா!—எஞ்சாத
தீமையே கொண்ட
சிறுதொழிலாய் எங்கோமான்
வாய்மையே கண்டாய் வலி.

என்கிறான் இளைஞன். தன்னுடைய மகனுடைய வீரம் நிறைந்த இந்த மொழிகளைக் கேட்ட சமையற் காரனாயிருக்கும் நளன் மனதுக்குள்ளேயே மகிழ்ந்து பெருமிதமடைந்து,

'மன்னர் பெருமை
மடையர் அறிவரோ
உன்னை அறியாது
உரைசெய்த—என்னை
முனிந்தருளல்' என்று
முடிசாய்த்து நின்றான்
கனிந்துருகி நீர்வாரக் கண்.

"அப்பா! கோபித்துக் கொள்ளாதே. நான் தெரி யாமற் சொல்லிவிட்டேன். மன்னர்களுடைய பெருமையை சமையற்காரனாகிய நான் அறிவேனா? மன்னித்து விடு" என்று தலைவணங்கிக் கண்ணீர் விட்டுச் சொன்னான் நளன்.

இனி, கதையை முடித்துவிடுவோம். அதன் பிறகு அந்தச் சமையற்காரன்தான் நளன் என்பது வெளியாகிறது. சமையற்காரனும் தன் பழைய நளன் வடிவத்தோடு விளங்குகின்றான். மாமனார் மருமகனைக் கண்டு அடைந்த மகிழ்ச்சியைச் சொல்லவேண்டுமா? நாயகனை அடைந்துவிட்ட தமயந்திக்கு உண்டான ஆனந்தத்தை அளவிடவும் முடியுமா? குழந்தைகளின் குதூகலத்தை வர்ணிக்க வார்த்தையும் உண்டா! காசிராஜன் மிகவும் வருத்தப்பட்டு மன்னிப்புக் கேட்டுக் கொண்டு காசிக்குப் போய்விடுகின்றான். நளனைப் பிடித்த சனியனோ, கெட்டகாலமோ நீங்கிவிட்டது. நளன் தன்னுடைய ராஜ்யத்தை அடைந்து, அந்த அன்னியனுடைய ஆட்சியிலிருந்து மீட்டு, செங்கோல் செலுத்தி மனைவி மக்களுடன் சுகமாக வாழ்ந்தான்.

அந்த இளைஞர்கள், தங்களுடைய நாட்டை அன்னியன் ஆள்வதைக் குறித்து எவ்வளவு துக்கப்பட்டார்கள் என்பதையும், அவர்கள் தங்களுடைய தந்தையின் கண்ணியத்தை எவ்வளவு பெருமையோடு காப்பாற்றினார்கள் என்பதையும் இளைஞர்களாகிய நீங்கள் மிகவும் பாராட்டுவீர்கள் என்று நம்புகிறேன்.

□ □ □